வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : news@eelanadu.lk மலர் : 03 26.11.2022 சனிக்கிழமை இதழ் : 353 பக்கங்கள் : 16

# ரணில் விக்கிரமசிங்க அரசுடனான பேச்சு; சகல தமிழ் கட்சிகளும் கூடியே இறுதி முடிவு

## நேற்றைய பூர்வாங்க கூட்டத்தில் தீர்மானம்

• மூன்று நிபந்தனைகளை விதிக்கவும் திட்டம்

கொழும்பு, நவம்பர் 26

**இனப் பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கத்துடன் பேசுவதற்கு முன்னர் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் கலந்துரையாடி இறுதியான முடிவுகளை எட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அத்துடன், பேச்சுக்கு முன்பதாக அரசமைப்பில் இருக்கும் அதிகாரப் பரவலாக்கலை - 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும், காணி ஆக்கிரமிப்பை உடனடியாக நிறுத்த வேண்டும் - அபகரிக்கப்பட்ட காணிகளை உடனடியாக விடுவித்தல் என மூன்று நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றும் இரா. சம்பந்தன் தலைமையில் கூடிய கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் தமிழ்க் கட்சிகளின் பூர்வாங்க சந்திப்பாக, நேற்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ் 15

## கூட்டமைப்பு தீர்மானத்துக்கு அமைச்சர் டக்ளஸ் வரவேற்பு



யாழ்ப்பாணம், நவ. 26

அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுகளின்போது நிலைமைகளுக்கு ஏற்ப கலந்தாலோசனை மூலம் தீர்மானங்களை மேற்கொள்வது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை அமைச்சர் கே. என். டக் 15

## நாடு திரும்பிய நாளன்றே செலவு வைத்தார் பஸில்!

கொழும்பு, நவ. 26

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ கட்டுநாயக்க வானூர்தி நிலையம் ஊடாக நாடு திரும்பியபோது, “தங்கப் பாதை“ முனையத்தின் சேவைகளை பயன்படுத்தியதற்காக செலுத்த வேண்டிய 60 ஆயிரம் ரூபாயை சிவில் வானூர்தி சேவைகள் அதிகார சபையினர் பின்னர் செலுத்தினர் என்று தெரிய வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியபோது, இந்த சேவை வழங்கப்பட்டாலும் நேற்று முன்தினமே பணத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய 15

## சா/தர பெறுபேறுகள் நேற்று வெளியாகின!

கொழும்பு, நவ. 26

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தர பரீட்சை பெறுபேறுகள் நேற்று மாலை வெளியாகின.

பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk மற்றும் www.results.exams.gov.lk என்ற இணையத்தளங்களில் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

## மாவீரரை நினைவுகூர தடை; மீளப் பெற்றனர் பொலிஸார்!

மன்னார், நவ. 26

மன்னாரில் மாவீரர் தினத்தை நினைவுகூருவதற்கு எதிராக அடம்பன் பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் இடைக்கால தடை ஒன்றை பெற்ற நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அந்த வழக்கை அடம்பன் பொலிஸார் மீளப் பெற்றனர்.

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி உயிரிழந்த மாவீரர் நினைவுநாள் நாளை தமிழர் தாயகம் எங்கு அனுஷ்டிக்கப் படவுள்ளது. நினைவேந்தலுக்கு எதிராக அடம்பன் பொலிஸாரால்நேற்று முன்தினம் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் இடைக்கால 15

## தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்ட மேடை உடைப்பு!

மட்டக்களப்பு, நவ. 26

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்ட மேடை உடைத்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக தரவை மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக்குழு தலைவர் வி. லவகுமார் தெரிவித்தார்.


அத்துடன், ஜேர்மன் நாட்டிலிருந்து தரவை துயிலும் இல்லத்துக்கு நிதி கிடைப்பதாகக் கூறப்படும் தகவல்களும் முற்றிலும் உண்மைக்கு 15

## சிறுவர் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும்!

யுனிசெவ் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, நவ. 26

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான நெருக்கடியை தவிர்ப்பதற்கு பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் 15



## கட்டாய இராணுவப் பயிற்சியை இளையோருக்கு வழங்குங்கள்!

அத்துரலிய தேரர் வலியுறுத்து

கொழும்பு, நவ. 26

18 - 20 வயது வரையான இளையோருக்கு ஆறு மாத கால இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் பங்கேற்று பேசிய அவர்,

நீரில் மூழ்கும் இளைஞரை காப்பாற்றவோ, தென்னை மரத்தில் ஏறவோகூட தற்போதைய இளைய தலைமுறையிடம் ஆளுமை இல்லை. எனவே, 18 தொடக்கம் 20 வயது வரை உள்ள இளையோர்களுக்கு ஆறு மாதகால இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஐ)

## யானை தாக்கி முல்லைத்தீவில் ஒருவர் மரணம்!

முல்லைத்தீவு, நவ. 26

முல்லைத்தீவில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா மெனிக்பாம் கிராமத்தை சேர்ந்த ஒட்டுசுட்டான் சின்னச்சாளம்பனில் வசித்து வந்த பச்சைமுத்து 15

## மின்சார கட்டணத்தை மீண்டும் திருத்த முடிவு

அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பிப்பு

கொழும்பு, நவ. 26

நடைமுறைக்கு சாத்தியமான மின்சார கட்டணம் தற்போது திருத்தம் செய்யப்படவில்லை. எனவே, மின் கட்டணத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்கான பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது - என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். 15

## இப்படியும் நடக்கிறது...!

கடந்த பத்தாம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கின் பிரச்னைக்கு அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னால் தீர்வு காணப்போவதாக அறிவித்தபோது மிகத் தெளிவாகவே எந்த எந்த பிரச்னைக்கு தீர்வுகாணப் போவதாகவும் அறிவித்திருந்தார்.

கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், பசுமை அபிவிருத்தி தொடர்பாகவே தீர்வுகாணப்போவதாக அறிவித்தார்.

அதற்கான பேச்சுகளை அடுத்த வாரமே தொடங்கப்போவதாக கூறியவர், ஒரு வாரத்தின் பின்னர், பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க வந்திருந்தபோது, தமிழ் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு வந்தால் பேச்சுக்கு தான் தயார் என்றார்.

இந்த விடயங்கள் குறித்து பல தடவை இந்தப் பத்தியில் குறிப்பிட்டாகிவிட்டது.

ஆனால், கடந்த புதனன்று வரவு - செலவுத் திட்ட இரண்டாவது வாசிப்புமீதான வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் உரையாற்றிய ஜனாதிபதி, திடீரென்று இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் வகையில் பேச்சு நடத்தப்போவதாகவும் அதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டப்போவதாகவும் அறிவித்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இனப் பிரச்னை என்றோ அல்லது தமிழர் பிரச்னை என்பதையோ குறிப்பிடுவதைத் தவிர்த்த ரணில், திடீரென்று இரண்டு வாரங்களில் இனப்பிரச்னைக்கு தீர்வு காண அனைத்துக் கட்சிகளையும் பேச்சுக்கு அழைத்தார்.

வழக்கத்துக்கு மாறாக, பாராளுமன்றத்திலேயே ஒவ்வொருவர் பெயரையும் சொல்லி நீங்கள் தயாரா? நீங்கள் தயாரா என்று அவர் கேட்டுக்கொண்டிருந்தபோதே, குறுக்கிட்ட எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியல்ல, “நாங்கள் ரெடி, ஆனால் பதின்மூன்று பிளஸ் என்று உலகத்துக்கு உறுதியளித்த மகிந்த இப்போதும் அதற்கு ரெடியாக இருக்கிறாரா”, என்று கேள்வி கேட்க, மகிந்தரும் எழும்பி நாங்களும் ரெடிதான் என்றார்.

ஜனாதிபதி ரணில், கடந்த பத்தாம் திகதி பிரச்னைக்கு தீர்வு காண விரும்புவதாக கூறியதைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்து வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ரணில் தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கிறார் என்றும் தமிழ் மக்கள் அவரின் கூற்றை நம்பி ஏமாறுவதற்குத் தயாராக இல்லை என்றும் தமது கட்சி ஆட்சிக்கு வந்ததும் தமிழர் பிர்சனைக்கு தீர்வு காணப்படும் என்றும் அறிவித்தார்.

அதே சஜித், பதின்மூன்றிலிருந்து அதிகாரங்களை குறைக்கவோ அல்லது கூட்டவோ தான் அனுமதிக்கப்போவதில்லை என்றும் திட்டவட்டமாக அறிவித்தார்.

தமிழ் தேசியக் கட்சிகள் தமிழர் பிரச்னைக்கு பதின்மூன்று தொடக்கப்புள்ளியும் அல்ல என்று கூறிக்கொண்டிருக்க, சஜித் பதின்மூன்றுக்கு மேலே செல்லப்போவதில்லை என்று கூறிக் கொண்டு தமிழர் பிரச்னைக்கு ரணில் தீர்வு காண மாட்டார் எனவும் தன்னால் மட்டுமே தீர்வுகாணப்படும் என்றும் கூறிக்கொண்டிருக்கிறார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர், ரணில் விடுத்த அறிவிப்புக்கும், இப்போது கடைசியாக விடுத்துள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கும் இடையே பாரிய வேறுபாடு ஏன் திடீரென்று ஏற்பட்டது என்பது குறித்து பலரும் புருவங்களை உயர்த்திக் கொண்டிருக்கின்றனர். இந்த இடைவெளியில் அப்படி என்ன நடந்தது என்பது குறித்து ஆராய முற்பட்டபோதுதான் அந்த விடயம் ஞாபகத்துக்கு வந்தது.

அண்மைக்காலமாக இந்தியாவுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருப்பது குறித்து இந்தப் பத்தியில் எற்கனவே விலாவாரியாக பார்த்தோம்.

இப்போது இனப்பிரச்னைக்கு தீர்வுகாண விரும்புவதும் அதிலும் குறிப்பாக இந்த பதின்மூன்று பற்றி பேசப்படுவதும் நமது கவனத்தை ஈர்த்திருக்கின்றது. இந்தியாவும் பல ஆண்டுகளாக இந்த பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துமாறே கேட்டுக் கொண்டிருக்கின்றது. மகிந்த தரப்பும் இப்போது அதற்கு சம்மதம் தெரிவித்திருக்கின்றது. எதிரணி தரப்பும் தமது சம்மதத்தை தெரிவித்திருக்கின்றது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அதனை தன்னால் செய்ய முடிந்தால், அது இந்தியாவை திருப்திப்படுத்துவதாக இருக்கும் என்று ரணில் தரப்பு கணக்குப் போட்டிருப்பதாக ரணிலுக்கு நெருக்கமான தரப்பு தகவல் தந்தபோது, இதைவிட முக்கியமான செய்தி ஒன்றும் இப்போது கசிந்திருக்கின்றது.

அண்மையில், கொழும்பு வந்த இந்திய புலனாய்வு அமைப்பான றோவின் தலைவர் கோயல் ஜனாதிபதியுடன் நடத்திய அந்த சந்திப்பின் பின்னணியிலேயே இப்போது திடீரென்று ஜனாதிபதி ரணில் இனப்பிரச்னைக்கு தீர்வகாணும் முயற்சியில் குதித்திருப்பதாக நம்பப்படுகின்றது.

இன்னுமொரு சந்தர்ப்பம் நெருங்கி வந்திருக்கின்றது. அதனையும் போட்டுடைக்கப் போகின்றோமா என்பதுதான் தெரியவில்லை.!

- ஊர்க்குருவி

# உயிரிழந்த எனது கணவரின் உடலை கொண்டுவர உதவுங்கள்

## வியட்நாமில் உயிரிழந்தவரின் மனைவி கண்ணீர் கோரிக்கை



சாவகச்சேரி, நவ. 26

கனடாவுக்கு செல்ல முற்பட்ட இலங்கையர்கள் வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு உயிரிழந்த சாவகச்சேரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கிரிதரனின் உடலை இலங்கைக்கு எடுத்துவர உதவுமாறு அவரின் மனைவி உருக்கமான கோரிக்கை விடுத்துள்ளார்.

வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 303 இலங்கையர்களில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ் அகதி ஒருவர் தற்கொலைக்கு முயற்சித்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக நேற்றுமுன்தினம் தகவல் வெளியாகியிருந்தது.

இந்த சம்பவத்தில், சாவகச்சேரி, கல்வயலை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சுந்தரலிங்கம் கிரிதரன் (வயது 37) என்பவரே உயிரிழந்தார். இந்த நிலையில் உயிரிழந்த கிரிதரனின் மனைவி கருத்து தெரிவிக்கும்போது, அங்கிருந்து கணவரின் உடலை இங்கே கொண்டுவர 30 இலட்சம் ரூபாய் வரையில் தேவைப்படும் என தெரிவித்து என்னிடம் கையொப்பம் கேட்டனர்.

அந்த 30 இலட்சம் ரூபாய் இருக்குமாயின் நான் ஏன் என்னுடைய கணவரை கடல் கடந்து அனுப்ப வேண்டும். நான்கு பிள்ளைகளையும் வளர்க்க வேண்டும், கடன் பிரச்னைகளும் இருக்கின்றன. அவற்றிலிருந்து மீள வேண்டும் எனத் தெரிவித்தே கடல் கடந்து என்னுடைய கணவர் சென்றார். இப்படி நடக்குமென நான் எதிர்பார்க்கவில்லை.

கடைசியாக நான் அரசாங்கத்திடம் விடுக்கும் கோரிக்கை. அப்பா இல்லை என்பதை எனது குழந்தைகளுக்கு காட்டுவதற்காக அவரின் உடலை எம்மிடம் கொண்டு வந்து சேர்த்து விடுங்கள் என கதறியழுத வண்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், படகு பிடிப்பட்ட பின்னர் தான் அடுத்த நாள் தொலைபேசியில் அழைத்து கூறினார், எந்தவொரு பிரச்னையும் இல்லை, யோசிக்க வேண்டாம், நான் அழைப்பை ஏற்படுத்திய தொலைபேசி எண்ணுக்கு திருப்பி அழைக்க வேண்டாம் என்று. இதைத்தான் கடைசியாகக் கூறினார். அதன் பின்னர் என்னைத் தொடர்பு கொள்ளவில்லை. கடைசியாக அவர் இறந்து விட்டார் என்ற செய்தியைத் தான் நான் அறிந்தேன் என்றும் கூறினார்.

மேலும், பொருளாதார சூழல் காரணமாகவே தனது கணவன் புலம்பெயர்ந்து சென்றதாகவும், இங்கு ஏற்கனவே செய்து வந்த தொழிலையும் விற்பனை செய்து, அதன் மூலம் பெற்ற பணத்திலேயே கனடா சென்றார் எனக் கூறும் மனைவி, கணவனின் உடலை எடுத்துவர தமிழ் அரசியல்வாதிகள், புலம்பெயர் தமிழர்கள் என அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கூறினார்.

(ஐ-03)

## பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி 3 வாரங்களுள் வெளியிடப்படும்

கொழும்பு, நவ. 26

2021ஆம் கல்வியாண்டுக்கான கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான பல்கலைக்கழக நுழைவுக்காக வெட்டுப்புள்ளி விரைவில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதற்கமைய, எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் வெட்டுபுள்ளி அடங்கிய விபரங்கள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலை உபகரணங்களுக்காக விதிக்கப்பட்டுள்ள செஸ் வரியை நீக்குவதற்கான பத்திரம் எதிர்வரும் 28 ஆம் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார். (ஐ)

## தந்தையின் நினைவேந்தலில் பங்கேற்காத கோட்டாபய



கொழும்பு, நவ. 26

ராஜபக்ஷக்களின் தந்தையாரான மறைந்த டி. ஏ. ராஜபக்சவின் நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பங்கேற்கவில்லை.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் மறைந்த டி.ஏ.ராஜபக்ஷவின் 55 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் டி. ஏ. ராஜபக்ஷவின் புதல்வர்களில் ஒருவரும் முன்னாள் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ பங்கேற்பார் என்று பொதுஜன பெரமுன கட்சி அறிவித்திருந்தது.

எனினும், ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த சமல் ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றனர். ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ பங்கேற்கவில்லை.

இதேவேளை, முதன்முறையாக டி. ஏ. ராஜபக்ஷவின் நினைவேந்தல் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும் என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்”

வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி

ஈழநாடு
Eelanadu
26.11.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ்த் தேசிய கட்சிகள் என்ன செய்ய வேண்டும்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு தொடர்பில் அனைத்து கட்சிகளுடன் பேசவிருப்பதாக அறிவித்திருக்கின்றார். அரசியல் தீர்வு முயற்சிக்கு தாம் ஆதரவளிப்பதாக மகிந்த ராஜபக்ஷவும் பாராளுமன்றத்தில் உறுதியளித்திருக்கின்றார். இதேபோன்று, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஆதரவளிப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். இந்த பின்புலத்தில் அடுத்த மாதம் அனைத்து கட்சிகளின் தலைவர்களையும் ரணில் விக்கிரமசிங்க அழைக்கவிருக்கின்றார். ஆரம்பத்தில், வடக்கு மக்களின் பிரச்னைகள் தொடர்பில் வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசவுள்ளாரெனக் கூறியிருந்த ரணில், தற்போது தனது நிலைப்பாட்டை மாற்றியிருக்கின்றார். ஒருவேளை, புதுடில்லிக்கு செல்லும்போது ஒரு தெளிவான செய்தியொன்றுடன் செல்வதற்கு அவர் முயற்சிக்கலாம்.

இவ்வாறானதொரு பின்புலத்தில், தமிழ்த் தேசிய கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? இந்த விடயத்தை எவ்வாறு அணுகப் போகின்றன? சமஷ்டி அடிப்படையில் மட்டும்தான் பேசுவோமென்று அடம்பிடிக்கப் போகின்றனவா அல்லது சூழ்நிலையைப் புரிந்துகொண்டு இன்றைய சூழலுக்கு ஏற்றவாறான அணுகுமுறைகளை கைக்கொள்ளப் போகின்றனவா? ஏனெனில், வழமையான சுலோகங்களுடன் அரசியல் தீர்வு முயற்சிகளை அணுகினால் விடயங்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே சாதகமாகும். ஏனெனில், நான் முயற்சித்தேன் ஆனால், தமிழ் கட்சிகள் தனக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்புகளை வழங்கவில்லையென்று கூறிவிட்டு சாதாரணமாக இதனை கடந்துசெல்வார்.

ஏனெனில், தமிழ்த் தேசிய கட்சிகள் என்னதான் சமஷ்டி தொடர்பில் பேசினாலும்கூட, அதற்கான நியாயங்கள் தொடர்பில் வலியுறுத்தினாலும்கூட, சமஷ்டிக்கான வெளி ஆதரவு சிறியளவில்கூட இல்லை. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வலியுறுத்திவரும் ஒரேயொரு நாடான இந்தியா எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வடக்கு - கிழக்கில் வரலாற்றுரீதியாக வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்தியதில்லை. தமிழ் மக்கள் கௌரவமாக நடத்தப்படக் கூடியதோர் அரசியல் தீர்வு தொடர்பிலேயே இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. அதற்கான அடிப்படையாக 13ஆவது திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால் சமஷ்டி கோரிக்கைக்கு சிங்களவர்கள் மத்தியிலும் ஆதரவில்லை. அதேவேளை, வெளித் தரப்புக்கள் மத்தியிலும் ஆதரவில்லை. ஒருவேளை, சிங்களவர்கள் எதிர்க்கும் ஒன்றை இந்தியா ஆதரிக்குமானால் இந்தியாவின் ஆதரவுடன் தமிழர்கள் அதற்காக போராடலாம். ஆனால், அதற்கான வாய்ப்பும் இப்போதில்லை.

தற்போது அரசியல் தீர்வுக்கு ஆதரவாக பேசும் அனைத்து சிங்கள அரசியல்வாதிகளும் ஒற்றையாட்சி முறைமையை இல்லாதொழிப்பதை ஆதரிக்கப் போவதில்லை. தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்கு தனது ஆட்சியில் தீர்வு காண்பதாகக் கூறும் சஜித் பிரேமதாஸ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒற்றையாட்சியை நீக்குவதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. அவரால் அவ்வாறு கூறவும் முடியாது. இந்தப் பின்புலத்தில் ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு விவகாரத்தை தந்திரோபாயமாக அனைத்து கட்சிகளினதும் கூட்டுப் பொறுப்பாக மாற்ற முயற்சிக்கின்றார். தமிழ்த் தேசிய கட்சிகள் இதனை தந்திரோபாயமாக அணுகினால் மட்டுமே, இன்றைய சூழலை கையாள முடியும் - அதேவேளை, இந்தியாவின் ஆதரவையும் பெறமுடியும்.

சமஷ்டியை ஓர் இறுதியான இலக்காக வைத்திருப்பதில் தவறில்லை - ஏனெனில், 1949இலிருந்து நாம் அந்தக் கோரிக்கையை முன்வைத்து வருகின்றோம். ஆனால், இன்றுள்ள சாதகமான சூழலை உச்சபட்சமாக பயன்படுத்திக்கொள்வதற்கு, முதலில் அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் கோரிக்கை ஒன்றே தமிழர்களுக்கு சாதகமானதொரு விடயமாக இருக்கின்றது. அந்த விடயத்துக்குத்தான் இந்தியாவின் ஆதரவு உண்டு. இதில் எவ்வாறான ஏற்பாடுகள் உள்வாங்கப்பட வேண்டுமென்பது தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசுவதுதான் காலத்துக்கு சரியானதாகும்.

எனவே, நிபந்தனைகளின் அடிப்படையில் இன்றைய சூழலை தமிழ் கட்சிகள் அணுக முடியாது. அவ்வாறாக அணுகினால் தமிழர்களுக்கு சாதகமாக தெரியும் அனைத்துமே ரணிலுக்கான வாய்ப்பாக மாறிவிடும். ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தின் அனுபவங்களிலிருந்தே ரணில் சிந்திக்கின்றார். ஏனெனில் அன்று, புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் மட்டும் தோல்வியடையவில்லை. மாறாக, ரணில் விக்கிரமசிங்கவின் செல்வாக்கும் வீழ்ச்சியுற்றது. இதன் காரணமாகவே, அரசியல் தீர்வு விவகாரத்தை ரணில் அனைவரதும் கூட்டுப் பொறுப்பாக மாற்ற முயற்சிக்கின்றார். முயற்சி வெற்றியடைந்தால் ரணிலின் அரசியல் செல்வாக்கு மேலும் உயரும். ஒருவேளை, தோல்வியேற்பட்டால் அதற்கு ரணில் பொறுப்பல்ல. ரணிலின் தந்திரேபாயத்துக்குள் சிக்காதிருக்க வேண்டுமானால், இந்தியா ஆதரிக்கும் ஒன்றை மட்டுமே தமிழ்த் தேசிய கட்சிகள் கையிலெடுக்க வேண்டும். இதற்கு மாறாக செயல்பட்டால் மீண்டுமொரு வாய்ப்பு கைநழுவுவது நிச்சயம்.

# இலங்கை தமிழ் அரசு கட்சியால் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

*யாழ்ப்பாணம், நவ. 26*

மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் நடைபெற்றது.



முன்னாள் போராளி செழியன் தலைமையில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் ஏற்பாட்டில் இந்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தி குறித்த நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வின்போது மாவீரர் தொடர்பான நினைவுரைகள் இடம்பெற்றன. பின்னர் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# 11 மில்லியன் டொலர் செலுத்தியும் இதுவரை ஒரு மாடுகூட வரவில்லை!

*கொழும்பு, நவ. 26*

நான்கு வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவிலிருந்து கறவை மாடுகளை இறக்குமதி செய்ய 11.01 மில்லியன் டொலர் செலுத்தப்பட்டும் ஒரு மாடுகூட இறக்குமதியாகவில்லை என்று தெரியவந்துள்ளது.

2012, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அவுஸ்திரேலியாவிலிருந்து 33.7 மில்லியன் டொலர்கள் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட 4,995 கறவை மாடுகளில் 3,991 மாடுகள் உயிரிழந்து விட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கால்நடைச் சபையை கோப் குழு முன்னிலையில் அழைத்து நடத்திய விசாரணையில் இது தெரிய வந்துள்ளது.

மேலும், 15 ஆயிரம் கறவை மாடுகளை இறக்குமதி செய்வதற்காக நான்கு வருடங்களுக்கு முன்னர் முற்பணமாக 11.01 மில்லியன் டொலர்கள் செலுத்தப்பட்டதாகவும் ஆனால், இது வரையில் ஒரு கறவை மாடு கூட நாட்டுக்கு கொண்டுவரப்படவில்லை எனவும் கூறப்படுகிறது. (ஐ)

# வலி. வடக்கில் 30 ஆண்டின் பின் வள்ளுவர் சிலை மீள் நிர்மாணம்!

*யாழ்ப்பாணம், நவ. 26*

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/247 தையிட்டி கிழக்கு வள்ளுவர்புரம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினரால் நேற்று முன்தினம் திருவள்ளுவர் சிலை திறந்துவைக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் வலி. வடக்கு பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து சென்ற பின், அப்பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது.


வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் முகாம்களில் வசித்துவந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவி வகித்த காலப் பகுதியில் வலி. வடக்கு பகுதியில் உள்ள பொதுமக்களின் இடங்கள் கட்டங்கட்டமாக விடுவிக்கப்பட்டு பொதுமக்கள் மீள்குடியேற்றப்பட்டனர்.

அதனை தொடர்ந்து அந்த மக்கள் தமது சொந்த இடங்களை அபிவிருத்தி செய்வதற்கான பல்வேறு வேலைத்திட்டங்கள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி, வலி. வடக்கில் வீதி புனரமைப்பு, வீட்டுத்திட்டம், குடிநீர் வசதி, மின்சார வசதி, மேலும் சில அத்தியாவசிய சேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, அப்பகுதி மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர். எனினும், வள்ளுவர்புரம் பகுதியில் காணப்பட்ட திருவள்ளுவர் சிலை நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் அழிவடைந்திருந்தது.

அதன் பின்னர் அக்கிராம மக்களின் முயற்சியால் சுமார் 7 இலட்சம் ரூபாய் செலவில் அதே இடத்தில் கருங்கல்லால் நிறுவப்பட்ட 4 அடி உயரமான புதிய திருவள்ளுவர் சிலை நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
அடுத்தவர் ஆலோசனைகள் கேட்டு செயல்பட வேண்டாம். உறவுகளால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். அனுசரித்துச் செல்வது நன்மையாகும். வெளியூர் பயணத்தில் கவனம் தேவைப்படும்.

**இடபம்**
நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். உங்கள் செல்வாக்கு உயரும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் ஆதரவு நன்மையாகும். செயல்களில் வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகளைத் தீர்ப்பீர்கள். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த விஷயம் முடிவிற்கு வரும். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்ற நிலை உண்டாகும்.

**கடகம்**
பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். செல்வாக்கு உயரும்.நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த வேலையை பிறரது உதவியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்**
எதிர்பாராத பயணம் உண்டாகும் என்றாலும் அதனால் லாபம் அடைவீர்கள். சந்திக்க நினைத்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். நண்பர்களிடம் ஏற்பட்ட சங்கடங்கள் தீரும். தடைகளைத் தாண்டி வெற்றியடைவீர்கள்.

**கன்னி**
வாழ்க்கைக்காக தைரியமான ஒரு முடிவை எடுப்பீர்கள். வீடு கட்டும் முயற்சி வெற்றியாகும்.பெற்றோர் வழியில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். உங்கள் திறமை வெளிப்படும்.

**துலாம்**
இழுபறியாக இருந்த வேலைகள் முடிவிற்கு வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.எதிர்பார்த்த வருவாய் உண்டாகும். பண விஷயத்தில் கவனம் அவசியம். கூட்டுத் தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும்.

**விருட்சிகம்**
வேலைகளும் இழுபறியாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். வழக்கமான செயல்களிலும் தடுமாற்றம் ஏற்படும்.உங்கள் எதிர்பார்ப்புகள் தள்ளிப்போகும். பிறரது விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**தனுசு**
வீண் அலைச்சல் அதிகரிக்கும். நெருக்கமானவர்களிடம் மனஸ்தாபம் ஏற்படும்.மறைமுக எதிரிகளால் தொல்லைகள் உண்டாகும். எதிர்பாராத செலவுகளால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். பிரச்னைகள் ஏற்படும்.

**மகரம்**
குல தெய்வ வழிபாடு நன்மையாகும். உங்களுக்கு வர வேண்டிய பணம் வீடு தேடி வந்து சேரும். முயற்சிகள் வெற்றியாகும்.குடும்பத்தினர் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களின் உதவி உண்டு.

**கும்பம்**
உங்கள் எண்ணம் நிறைவேறும். எதிர்பார்த்த பணம் உங்கள் கைக்கு வரும். மற்றவர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.வாழ்க்கைத் துணையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி பாராட்டு பெறுவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைத் தேடி வருவார்கள். நிதிநிலை உயரும்.

# கொள்கையை காக்க எதையும் இழக்கலாம்!

## முதல்வர் ஸ்டாலின்

சென்னை, நவ. 26

கொள்கையை காக்க எதையும் இழக்கலாம் என்று முதல்வரும் தி. மு. க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் 'தத்துவ மேதை' டி. கே. சீனிவாசன் நூற்றாண்டு நிறைவு விழாவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'தத்துவ மேதை' டி.கே.சீனிவாசனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அவரின் எழுத்துகளை, எண்ணங்களை மூன்று நூல்களாகத் தொகுத்து வெளியிடப்படுகிறது. அப்பாவைப் போலவே சிறந்த எழுத்தாளராக பேச்சாளராக வலம்வரக் கூடியவர்தான் டி. கே. எஸ். இளங்கோவன்.

திராவிட இயக்கம் என்பது அரசியல் இயக்கம் மட்டுமல்ல, இது அறிவு இயக்கம். நமது அறிவியக்கக் கோட்பாடுகளை அறிய உதவும் டி. கே. சீனிவாசனின் நூல்களைப் போன்று ஏராளமான நூல்கள் வர வேண்டும். இன்றைய தேவை இதுதான்.

இளைஞர்கள் திராவிட இயக்கம் சார்ந்த புத்தகங்களைத் தேடிப் படிக்க வேண்டும். அவர்கள் தங்களை கூர் தீட்டிக் கொள்ள வேண்டும். கொள்கை இருந்தால்தான் கட்சி.



கட்சி இருந்தால்தான் ஆட்சி. இதில் நான் எப்போதும் உறுதியாக இருக்கிறேன். கொள்கையைக் காப்பாற்றுவதற்காக எதையும் செய்யலாம். எதையும் இழக்கலாம்! ஆனால், பதவியைக் காப்பாற்ற எதையும் செய்துவிட முடியாது! இத்தகைய கொள்கை உரத்தை நமக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர்கள்தான் டி. கே. சீனிவாசனைப் போன்ற எழுத்தாளர்கள். தமிழ்நாடு என்ற கட்டடத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்குத்தான் இருக்கிறது என்றார். (ஐ)

# யாருடன் கூட்டணி என்பதை தேசிய குழுவே முடிவு செய்யும்!

## பாஜ. க. தமிழக தலைவர் அண்ணாலை

சென்னை, நவ. 26

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் யாருடன் கூட்டணி என்பது குறித்து பா. ஜ. கவின் தேசிய ஆட்சிமன்றக் குழுதான் முடிவு செய்யும். தற்போதைக்கு அ. தி. மு. கவுடனான கூட்டணி தொடர்கிறது என்று தமிழக பா. ஜ. க. தலைவர் கே. அண்ணாமலை தெரிவித்தார்.

நாகரிகமான அரசியலை பா. ஜ. க. முன்னெடுத்து வருகிறது. இன்னும் 10 நாள்களில் கட்சியில் அதிரடி நடவடிக்கை எடுக்கப்படும். ஒழுக்க விசயத்தில் கட்சியின் லட்சுமண ரேகையை யார் மீறினாலும் கட்சித் தலைவராக நடவடிக்கை எடுப்பேன். கட்சியில் களை எடுக்க வேண்டியவர்களை நிச்சயம் களை எடுப்பேன்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியை முடிவு செய்வது பாஜக தேசிய ஆட்சிமன்றக் குழுதான். தற்போது, அதிமுகவுடன் கூட்டணி தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இருப்பினும் 2024 மக்களவைத் தேர்தல் எப்படி இருக்கும் என்பதை இப்போதே கணிக்க முடியாது.

பா. ஜ. க. வேகமாக வளர்ந்திருக்கிறது. எவ்வளவு வாக்கு வங்கி உயர்ந்துள்ளது என்பது குறித்து கட்சித் தலைமைக்கு தெரிவிப்போம். யாருடன் கூட்டணி என்பதை தேசிய தலைமைதான் முடிவு செய்யும் என்றார் அவர்.



பாமகவின் அரசியல் நிலைப்பாடு குறித்த கேள்விக்கு, அதுபற்றி பாமக தான் பேச வேண்டும் என்றார். (ஐ)

# தமிழக அரசை கண்டித்து அ.தி.மு.க. உண்ணாவிரதம்

கோவை, நவ. 26

ஆளும் தி. மு. க. அரசை கண்டித்து அ. தி. மு. க. சார்பில் எதிர்வரும் 2ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவுள்ளது.

கோவை மாவட்ட அ. தி. மு. க. அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு முன்னாள் அமைச்சரும், கோவை மாநகர் தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.பி.வேலுமணி எம். எல்.ஏ., தலைமை தாங்கினார்.

மின் கட்டணம், சொத்து வரி, கழிவு நீர் இணைப்பு கட்டணம் உயர்வு மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் டிசெம்பர் 2ஆம் திகதி சிவானந்தா காலணியில் உண்ணாவிரத போராட்டம் நடத்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்த போராட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் எஸ். பி.வேலுமணி தலைமை தாங்குகிறார். போராட்டத்தில் அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு உண்ணாவிரதத்தை தொடங்கி வைப்பார்.

# காங்கிரஸ் தலைவர் தெரிவு; 11 பேர் டில்லி பயணம்

சென்னை, நவ. 26

தமிழக காங்கிரஸில் தொடங்கி இருக்கும் உட்கட்சி பிரச்னை உச்சகட்டம் அடைந்துள்ளது.

இதனிடையே காங்கிரஸ் தலைவர் போட்டி நடக்கிறது. அந்தக் கட்சியில் 18 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். இவர்களில் 11 பேர் நேற்று டில்லி சென்றனர்.

இவர்கள், கட்சியின் தலைவரை தெரி செய்வதில் செல்வாக்கு செலுத்துவர். (ஐ)



# வீதியில் இறந்து கிடந்த முதலை!

யாழ்ப்பாணம், நவ. 26

தொண்டைமானாறு பகுதியில் முதலையொன்று வீதியில் இறந்த நிலையில் காணப்பட்டது.

அச்சுவேலியில் இருந்து தொண்டைமானாறு செல்லும் வீதியிலேயே முதலை உயிரிழந்த நிலையில் காணப்பட்டது.

உயிரிழந்த முதலையை அகற்றுவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

தொண்டைமானாறு ஏரியில் முதலை இருப்பதாக ஏற்கனவே பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா நகரில் 3 பெண்கள் கைது

வவுனியா, நவ. 26

வவுனியா நகர்ப்பகுதியில் விபசாரத் தொழிலில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 3 பெண்களை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நகர்ப்பகுதியில் சோதனைகளை மேற்கொண்ட வவுனியா போதை ஒழிப்புப் பொலிஸார், விபசாரத் தொழிலில் ஈடுபட முயற்சித்த குற்றச்சாட்டில் 3 பெண்களைக் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், செட்டிகுளம், கிளிநொச்சி, காலி ஆகிய பகுதிகளை சேர்ந்த பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (அ)

# சமஷ்டி அரசியலமைப்பே தமிழருக்கு சுதந்திரம் தரும்

## கூறுகின்றார் விக்னேஸ்வரன் எம்.பி.

கொழும்பு, நவ. 26


ஒற்றையாட்சியை முடிவுக்கு கொண்டு வந்து நியாயமான அதிகார பகிர்வை செயற்படுத்தவேண்டும். இதன்படி சமஷ்டி அரசியலமைப்பே தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்கும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றின் மீதான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரவு-செலவுத் திட்டத்தில் 530 பில்லியன் ரூபா பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அளவுக்கதிகமான இராணுவத்தினருக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதே தவிர மக்களுக்காக அல்ல.

2009 இற்கு பின்னர் இராணுவத்தினருக்கான செலவு குறையும் என்று எதிர்பார்த்



தாலும் ஒவ்வொரு வருடமும் இது அதிகரித்துக்கொண்டே போகின்றது. கல்வி, சுகாதாரம், விவசாயம் உள்ளிட்ட துறைகளுக்கு குறைந்தளவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மை சமூக பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்போது இது தொடர்பில் கேள்வியெழுப்புகின்றனர். மக்களின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாதுகாப்பு செலவீனம் வருடாந்தம் அதிகரிக்கின்றது. இவ்வாறு பாதுகாப்புக்கான செலவீனம் அதிகரிப்பதன் ஊடாக வடக்கு ,கிழக்கில் இன்னும் சமாதானம் ஏற்படவில்லை என்பதனையே காட்டுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவம் மக்களின் காணிகள், விவசாயக் காணிகளைக் கைப்பற்றி வைத்திருக்கின்றது. மக்களுக்கு அதிக வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் காணிகள் அதிகளவில் இராணுவத்தினர் வசமுள்ளது. மக்கள் வாழ்வாதாரம் இன்றி தவிக்கின்றனர்.

மாகாண சபைகள் மக்களுக்காக நல்ல வேலைத்திட்டங்களை கொண்டு வந்த நிலையில் இராணுவம் காணிகளை கைப்பற்றி செயற்படுகின்றது. மேலும் வடக்கில் இராணுவ முகாம்கள் மற்றும் சோதனை சாவடிகள் இருக்கின்றன. இங்குள்ள காணிகளை மக்களுக்கு வழங்க வேண்டும்.

இதேவேளை ஒற்றையாட்சிக்குள் இருந்துகொண்டு வெளிநாட்டு தமிழர்களின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாது. வடக்கு, கிழக்குக்கு நீதி வழங்கவேண்டும்.

எங்கள் தேவைகள் எங்களுக்கு முன்னுரிமையாகவே இருக்குமே தவிர மத்திய அரசுக்கு தேவையானதாக இருக்காது.

ஒற்றையாட்சியை முடிவுக்கு கொண்டு வந்து நியாயமான அதிகார பகிர்வை செயற்படுத்த வேண்டும். இதன்படி சமஷ்டி அரசியலமைப்பே தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்கும்-என்றார். (அ)

# கரைச்சி பிரதேச சபை அமர்வில் மாவீரருக்கு விளக்கேற்றி அஞ்சலி

கிளிநொச்சி, நவ. 26

கரைச்சி பிரதேச சபை அமர்வில் மாவீரர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.



கரைச்சி பிரதேச சபையின் அமர்வு நேற்றுக் காலை தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் ஆரம்பமானது.

இதன்போது, கனகபுரம் மற்றும் தேராவில் மாவீரர் துயிலும் இல்லங்களை கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் கொண்டுவந்து, மனிதவளம், இயந்திர வளங்களை அங்கு பயன்படுத்தல் மற்றும் மரக்கன்றுகளை வழங்கல் எனும் தீர்மானமும், பிரதேச சபை ஒதுக்கீட்டில் மாவீரர்களின் குடும்பங்களுக்கு உதவும் வகையில் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளவும் தவிசாளரினால் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

குறித்த பிரேரணை அனைத்து கட்சி பிரதிநிதிகளின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக தவிசாளர் சபையில் அறிவித்தார்.

தொடர்ந்து, சபையில் மாவீரர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பெண்கள் ஓமானுக்கு கடத்தல் மற்றுமொரு சந்தேகநபர் கைது

கொழும்பு, நவ. 26

வெளிநாட்டுக்கு வேலைக்காக செல்லும் இலங்கை பெண்களை ஓமான் நாட்டுக்கு கடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மாளிகாவத்தை பிரதேசத்தை சேர்ந்த 47 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் டிசெம்பர் 01 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மனித கடத்தல், கடத்தல் விசாரணை மற்றும் கடல் சார் குற்ற புலனாய்வுப் பிரிவினர் இதற்கு முன்னர் சந்தேக நபர்கள் சிலரை கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அதிர வைக்கும் சிறுநீரக மோசடி; பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, நவ. 26

பணம் வழங்குவதாகக் கூறி, சிறுநீரகத்தை தானமாக பெற்றுவிட்டு, தற்போது பணம் வழங்க மறுப்பதாக பொரளையில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையொன்றுக்கு எதிராக ஐந்து பேர் பொரளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கொச்சிக்கடை, கொழும்பு ஸ்ரீ பன்னானந்த மாவத்தை, புளூமெண்டல் சிறிசட செவன வீடமைப்புத் தொகுதி, கொழும்பு 13, பிரானியா தெரு, கொழும்பு 15, சதிரு செவனவில் வசிக்கும் 26, 32, 33, 41 மற்றும் 42 வயதுடையவர்கள் இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர்.

புளூமாண்டலில் அமைந்துள்ள சிரிசட செவன வீட்டுத் தொகுதியில் வசிக்கும் சதுன் என்ற நபர் தலையிட்டு, பாய் என்ற நபர் மூலம் இந்த ஐந்து முறைப்பாடுதாரர்களையும் சம்பந்தப்பட்ட மருத்துவமனையுடன் தொடர்பு படுத்தியுள்ளார்.

சிறுநீரகம் தானம் செய்த பிறகு பணம் வழங்கப்படும் என்று உறுதியளித்ததாக மருத்துவமனை மீது புகார் அளித்தவர்கள் தெரிவித்தனர்.

இந்த முறைப்பாடு செய்தவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதாகவும், அவர்களின் சிறுநீரகங்கள் அறுவைச் சிகிச்சை மூலம் மற்றவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரு தெரிவித்தனர்.

ஆனால், சிறுநீரகம் வழங்கியவர்களுக்கு அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு உறுதியளித்த பணம் வழங்கப்படவில்லை. அந்த வைத்தியசாலைக்கு சிறுநீரக தானம் செய்பவர்களைக் கண்டுபிடித்த சதுன் என்ற நபர் வழங்கிய தகவலையடுத்து ஊடகம் ஒன்று இந்த மோசடியை வெளிப்படுத்தியதாக விசாரணைகளில் இருந்து பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

ஊடகங்கள் மூலம் தெரியவந்ததையடுத்து, வைத்தியசாலையுடன் தொடர்பில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தலையிட்டு, வைத்தியசாலைத் தரப்பினரையும், பாதிக்கப்பட்டவர்களையும் பொரளையில் உள்ள வழிபாட்டிடமொன்றுக்கு அழைத்து வந்து தலா 200,000 ரூபாவை வழங்கி விட்டுச் சென்றுள்ளார். சிறுநீரகம் விற்பது சட்டவிரோதமானது என சிறுநீரகத்தை வழங்கியவர்களை பொலிஸ் அதிகாரி மிரட்டியதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்தில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் என்பது தற்போது தெரிய வந்துள்ளது. இந்த உத்தியோகத்தர் இதற்கு முன்னர் மேல் மாகாண புலனாய்வுப் பிரிவில் பணியாற்றியவர் எனவும், பியகம வில்லேஜ் ஹோட்டல் உரிமையாளரை படுகொலை செய்ய முயற்சித்த தன் காரணமாக பணி இடைநிறுத்தப்பட்டவர் எனவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் சிறுநீரக கடத்தல் தொடர்பான ஐந்து முறைப்பாடுகள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)



## விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகளில் மேலும் ஐவருக்கு தலா 25 லட்சம் ரூபா!

கொழும்பு, நவ. 26

இலங்கை அரசாங்கத்தினால் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட மேலும் 5 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் (சுப்ரமணியம் மோகன், ராமசாமி கிருஷானந்தன், வேலு யோகராஜா, பிரம்மசிறி ரகுபதி ஐயர் ரகுபதிசர்மா, வேலாயுதன் வரதர்சன்) லைக்கா குழுமத்தின் நிறுவுனரும் தலைவரும், லைக்கா ஞானம் அறக்கட்டளையின் தலைவருமான அல்லிராஜா சுபாஸ்கரனின் தாயார் ஞானாம்பிகை அல்லிராஜா தலா 25 லட்சம் ரூபாய்களை வழங்கினார்.

லைக்கா ஞானம் அறக்கட்டளை, ஏற்கனவே விடுதலை பெற்ற 8 பேருக்கு தலா 25 லட்சம் ரூபாய்களை கடந்த சில வாரங்களுக்கு முன் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அடித்தாலும் விரட்டினாலும் நான் சு.கவைவிட்டு விலகவேமாட்டேன்

### நிமல் சிறிபால டி சில்வா விடாப்பிடி



**கொழும்பு, நவ. 26**

**தம்மை அடித்தாலும், விரட்டியடித்தாலும் கட்சியை விட்டு விலகப் போவதில்லை என துறைமுகங்கள், விமான போக்குவரத்து மற்றும் கப்பல் போக்கு வரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 9 உறுப்பினர்களின் உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்ததையடுத்தே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட ஒன்பது உறுப்பினர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை முடியும் வரை அவர்களின் உறுப்புரிமையை இடைநிறுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அண்மையில் தீர்மானித்தது.

இதன்படி, அமைச்சர் பதவிகளை ஏற்று தற்போதைய அரசாங்கத்தில் இணைந்துள்ள நிமல் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, ஜகத் புஷ்பகுமார, சாமர சம்பத் தசநாயக்க, சாந்த பண்டார, லசந்த அழகியவன்ன, ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் இடைநிறுத்தப்பட்டனர்.

எனினும் எங்களை அடித்து விரட்டினாலும் கட்சியை விட்டு போக மாட்டோம் என்று நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (அ)

# உடையார்கட்டில் காணி ஒன்றில் உரப்பையில் மனித எலும்புக்கூடு!

முல்லைத்தீவு, நவ. 26

புதுக்குடியிருப்பு உடையார்கட்டு தெற்கு அம்மன் கோவிலுக்கு பின்புறம் உள்ள காணியொன்றை நேற்று முன்தினம் துப்புரவு செய்துகொண்டிருந்தபோது, காணியின் மலசலகூடத்துக்கு பின்னால் மனித எலும்புகளுடன் உரப்பை மீட்கப்பட்டது.

உரப்பை ஒன்றிற்குள் எலும்புத் துண்டுகள் காணப்பட்டன.

நிலத்தின் உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். பையில் மண்டை ஓடு மற்றும் எலும்புகள் இருந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

பலா மரத்தை வெட்ட மண்ணைத் தோண்டியபோது, கயிறு ஒன்று காணப்பட்டதாகவும் மேலும் தோண்டிய போது பழைய உரமூட்டை மூன்றடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்டதாகவும் காணியின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

யுத்த காலத்தில் உயிரிழந்த ஏதேனும் ஒரு தரப்பினருடைய எலும்புக்கூடாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. (அ)







## சமத்துவக் கட்சி அலுவலகத்தில் நேற்று மாவீரர் நாள் நிகழ்வுகள்

கிளிநொச்சி, நவ. 26

2022 மாவீரர் நாள் நிகழ்வுகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள சமத்துவக் கட்சியின் அலுவலகத்தில் முன்னாள் அரசியல் துறைப் போராளி வேங்கை தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

கணவன் மற்றும் சகோதரியை மாவீரராக கொண்ட கந்தசாமி சுமதி என்பவர் பொதுச் சுடரை ஏற்றி வைக்க முன்னாள் போராளிகள், மாவீரர்களின் உறவினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் ஏனைய சுடர்களை ஏற்றி வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து மாவீரர்களின் பொது நினைவுப் படத்திற்கான மலர் அஞ்சலி இடம்பெற்றது. (அ)

# கொழும்பில் பல வைத்தியசாலைகள் மின்சாரக் கட்டணம் செலுத்தவில்லை

கொழும்பு, நவ. 26

கொழும்பிலுள்ள பல வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார அமைச்சு மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தவில்லை என இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிறுவனங்களிடமிருந்து சபைக்கு செலுத்தவேண்டிய மொத்தத் தொகை 400 மில்லியன் ரூபாவாகும்.

சுகாதார அமைச்சு, கொழும்பு தேசிய வைத்தியசாலை, கொழும்பு பல் வைத்தியசாலை, கொழும்பு கண் வைத்தியசாலை, காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, பொரளை ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, தேசிய இரத்த மாற்று நிலையம் உள்ளிட்ட பல நிறுவனங்களிடமிருந்து இந்தத் தொகை சேகரிக்கப்பட வேண்டியுள்ளது.

இந்த நகரத்தில் உள்ள அனைத்து சுகாதார நிறுவனங்களும் மாதாந்தம் 100 மில்லியன் ரூபா மின்சாரக் கட்டணத்தைப் பெறுவதாக இந்த ஆதாரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இந் நிலுவைத் தொகையை வழங்குமாறு மின்சார சபை பல சந்தர்ப்பங்களில் இந்த நிறுவனங் ணகளுக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு விபத்தில் பலி!

கொழும்பு, நவ. 26

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பிரதம குருவும் சிலாபம், முன்னேஸ்வரம் வடிவாம்பிகா தேவி சமேத முன்னைநாதப் பெருமான் ஆலயத்தின் மகோற்சவ குருவுமான சிவ சிவானந்த குருக்கள், நேற்று முன்தினம் காலை விபத்தில் சிக்கி மரணமானார்.

கண்டி அங்கும்புர பிரதேசத்தில் கெப்பிற்றிக்கொல்ல பகுதியிலுள்ள ஆலயமொன்றின் பாலஸ்தாபன கிரியைகளுக்காக ஓட்டோவில் பயணித்துக்கொண்டிருந்தபோதே, இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மிக வேகமாகச் சென்ற ஓட்டோ பிரேக் பிடிக்காத காரணத்தினால் வேகக் கட்டுப்பாட்டையிழந்து, அருகிலிருந்த மதில் மேல் மோதி விபத்துக்குள்ளானது. சாரதியின் கை முறிந்துள்ளதாகவும் பிரதம குருவுக்கு நெஞ்சுப் பகுதியில் பலத்த அடி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக அங்கும்புற ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றபோதும், அவரது நிலைமை மோசமாக இருந்ததால், அவசரமாக கண்டி, போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

ஆஸ்பத்திரியின் வெளி நோயாளர் பகுதிக்கு எடுத்துச் சென்றபோது, அவரது உயிர் பிரிந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## சமபோஷ விற்பனைக்கு தடை

கொழும்பு, நவ. 26

சமபோஷ என்ற வர்த்தக நாமத்தில் மேலதிக தானிய உணவுகளை விநியோகம் செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை விதித்து மொறவக்க நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தப் பொருட்களைக் கைப்பற்றி பரிசோதனைக்கு அனுப்பியதில் அப்லாடோக்சின் அளவு அதிகமாக இருந்ததை வெளிப்படுத்தியதாக நீதிமன்றத்தில் அறிக்கை அளித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே, மொறவக்க பிரதேசத்துக்கு உட்பட்ட இப்பொருளின் விற்பனையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தடை செய்யுமாறும், தற்போது சந்தையில் உள்ள பொருட்களின் இருப்புகளை உடனடியாக அகற்றுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

## பல்கலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விரைவில்

கொழும்பு, நவ. 26

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் விரைவில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அதன்படி,எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாடசாலை உபகரணங்களுக்கான செஸ் வரியை நீக்குவது தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# 17ஆவது இடத்தில் இலங்கை

கொழும்பு, நவ. 26

சுற்றுலாப் பயணிகளுக்கான முதல் 20 இடங்களுக்குள் இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது.

பிரபல மற்றும் செல்வாக்கு மிக்க சஞ்சிகையான கொன்டேநாட் ட்ரவலர்ஸ் நடத்திய 2022 வாசகர்களின் தெரிவுகளின்படி, பயணிகளுக்கான சிறந்த நாடாக இலங்கை 17 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

போர்த்துக்கல், ஜப்பான் மற்றும் தாய்லாந்து ஆகியவை பயணிகளுக்கான முதல் மூன்று இடங்களில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இஸ்ரேல், துருக்கி மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளை விட இலங்கை, இந்த தரப்படுத்தலில் முன்னணியில் உள்ளது. (அ)

# அரிசி விலை 40 ரூபாவால் குறைக்கப்படும் சாத்தியம்

கொழும்பு, நவ. 26

ஒரு கிலோ நெல்லின் விலை இருபத்தி நான்கு ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நேற்று முன் தினம் நிலவரப்படி ஒரு கிலோ நெல் 101 ரூபாவாக குறைந்துள்ளது.

ஒன்றரை மாதங்களுக்கு முன், ஒரு கிலோ நெல்லை 125 ரூபாவுக்கு, ஆலை உரிமையாளர்கள் கொள்வனவு செய்தனர். ஆலை உரிமையாளர்கள் 64 கிலோகிராம் கொண்ட நெல் மூடையை எட்டாயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்த போதிலும், நேற்று முன் தினம் ஒரு நெல் மூடை 6500 ரூபாவுக்கு விற்பனையானது.

இந்தப் பருவ அறுவடையின்போது விவசாயிகளிடம் இருந்து ஒரு மூடை நெல் 4500 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கு ஆலை உரிமையாளர்கள் மத்தியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# ராஜபக்ஷக்களுக்கு பூ கொடுத்து நான் பிரதமர் பதவி கோரவில்லை

## ரணிலுக்கு பதிலடி கொடுத்தார் சஜித்

கொழும்பு, நவ. 26

ராஜபக்ஷக்களிடம் பூங்கொத்துடன் சென்று, பிரதமர் பதவிக்கு விண்ணப்பம் செய்யவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனக்கு பிரதமர் பதவி வழங்க வேண்டும் என்று நான் அவருக்கு கடிதம் எழுதவில்லை. பதவி கேட்டு நான் யாத்திரை செல்லவில்லை எனவும் அவர் கூறினார்.

நேற்று சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகியதை அடுத்து கருத்து வெளியிடும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தாம் எழுதிய கடிதம் தொடர்பில் நேற்று முன் தினம் இந்த சபையில் கலந்துரையாடப்பட்டதாகவும், தனது தனிப்பட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டு அன்றி கட்சியின் அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் புரிந்து கொண்டு தான் அந்தக் கடிதத்தை எழுதியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி தம்மிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்ததாகவும், அதன்போதே எழுத்து மூலமான பதிலை அனுப்பி வைத்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

அதன்போது, அரசாங்கத்தை அமைப்பதற்கு இடைக்கால குறுகிய கால நான்கு நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டதை நினைவு கூர்ந்த சஜித் பிரேமதாஸ, அதில் ஒரு நிபந்தனை குறிப்பிட்ட காலத்தில் பாராளுமன்றத்தை கலைப்பதும் ஆகும் என்றும் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவதும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இல்லாதொழிக்க அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் செயற்படுவதும், பாராளுமன்றத் தேர்தலை விரைவாக நடத்தி மக்களுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதும் மற்ற நிபந்தனைகள் ஆகும் எனவும் அவர் கூறினார். (அ)

# மன்னாரில் மாணவர்கள் மத்தியில் வீதி விபத்து குறித்து விழிப்புணர்வு

மன்னார், நவ. 26

விபத்து குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் வீதி போக்குவரத்து பொலிஸார் மற்றும் பிராந்திய தொற்றா நோய்கள் தடுப்புப் பிரிவினர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை மதியம் மன்னார் பொலிஸ் நிலைய வீதிப் போக்குவரத்து பிரிவினருடன் இணைந்து பிராந்திய தொற்றா நோய்கள் தடுப்பு பிரிவினரால் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் வீதிப் பாதுகாப்பு, விபத்து தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு மேற்கொள்ளப்பட்டது.



இதன்போது வீதி விபத்துக்கள் குறித்தும்,விபத்துக்களில் இருந்து எம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது உள்ளிட்ட பாதுகாப்பு விடயங்கள் குறித்தும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலை விடுமுறைக் காலம் அடுத்த வருடம் முதல் குறைப்பு

கொழும்பு, நவ. 26

பாடசாலை விடுமுறைக் காலத்தை அடுத்த வருடம் முதல் குறைத்து கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறைக்கான நேரத்தை அதிகரிக்க முயற்சிப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதன்படி, அடுத்த ஆண்டுக்குள் பாடத்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்ய முயற்சிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவர் உரையாற்றுகையிலேயே இதனைக் கூறினார். (அ)




# ரெலிகொம் ஊழியர்கள் கொழும்பில் போராட்டம்

கொழும்பு, நவ. 26

ஸ்ரீ லங்கா ரெலிகாம் நிறுவனத்தை விற்பனை செய்வதற்கு எதிராக அந்நிறுவன ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டுக்கு அதிக இலாபத்தைப் பெற்று தரும் இந்நிறுவனத்தை விற்பனை செய்வதன் மூலம் நாடு பெரும் நட்டத்தை அனுபவிப்பதுடன் பல ஊழியர்களின் வாழ்க்கை பாதிக்கப்படும் என ஸ்ரீலங்கா ரெலிகாம் நிறுவன ஊழியர்கள் தெரிவித்தனர். (அ)

# யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் 74 பயனாளிகளுக்கு புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், நவ. 26

கார்கில்ஸ் நிறுவனத்தின் வருடாந்த விவசாயிகளின் நலன் பேணும் திட்டத்தின் கீழ் நேற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 74 பயனாளிகளுக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட்டது.

கார்கில்ஸ் நிறுவனமானது விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் நலன் பேணும் திட்டத்தின் கீழ் வருடந்தோறும் பல்வேறுபட்ட சமூக வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது

இந்த வருடம் நாடு பூராகவும் பல மில்லியன் ரூபாய் செலவில் சமூக நலன் சார் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் நேற்று சுமார் மூன்று மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட நிதியீட்டத்தில் சமூக நலன் நோக்கு திட்ட புலமைப் பரிசல் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ,யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், வடக்கு மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மற்றும் கால்நடை வளர்ப்பு திணைக்களப் பணிப்பாளர், கார்கில்ஸ் நிறுவன பிரதம முகாமையாளர்களில் ஒருவர் மற்றும் கார்கில்ஸ் நிறுவனத்தின் வடக்கு, யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்து தமது கல்வியை தொடர்ந்து முன்னெடுத்து வரும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 11 பேரும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 12 பேரும் புலமைப்பரிசில் தொகையைப் பெற்றுக் கொண்டனர்.

பால் உற்பத்தி மற்றும் கால்நடை பண்ணையாளர்களின் தொழில் மேம்பாட்டுக்காக 52 பேருக்கு புலமைப்பரிசிலும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மூன்று உலகையும் வென்ற ‘பயிர்:

## கஞ்சாவை ஏற்றுமதி செய்ய இலங்கை திட்டம்

**- யூ.எல்.மப்றூக்**



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த வரவு - செலவுத் திட்ட உரையின் போது, ‘த்ரைலோக விஜேபத்ர’ (Trailoka Vijaya Patra) இலைப் பயிரை ஏற்றுமதிக்காக மாத்திரம் உற்பத்தி செய்வதற்கான முன்மொழி வொன்றினை நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

அவர் அந்தப் பயிரின் பெயரைக் கூறும் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தமாக சிரித்தனர். அப்போது ஜனாதிபதியும் மெலிதாகச் சிரித்து, கையொன்றை உயர்த்திக் காட்டியவாறு தனது முன்மொழிவைச் சமர்ப்பித்தார்.

‘த்ரைலோக விஜேபத்ர’ என்கிற பெயரை ஜனாதிபதி பயன்படுத்திய பின்னர், அது பேசுபொருளானது. பலருக்கு - அது என்ன என்று புரியவில்லை. கஞ்சா பயிரையே அவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

‘த்ரைலோக விஜேபத்ர’ என்றால் ‘மூன்று உலகங்களையும் வென்ற” என்று பொருளாகும். கஞ்சாவின் மருத்துவப் பயன்பாடுகளைக் குறிப்பிடும் வகையில் ‘மூன்று உலகங்களையும் வென்ற இலைகளைக் கொண்ட பயிர்” என அதனைக் குறிப்பிடுகின்றனர். ‘மூன்று உலகம்” என்பது பௌத்த பின்னணியைக் கொண்ட வார்த்தைகளாகும்.

### பிரித்தானியர் காலத்திலிருந்து தொடரும் தடை

இலங்கையில் பிரித்தானியர் காலத்திலிருந்து கஞ்சா தடைசெய்யப்பட்டுள்ளது. 1929ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க நச்சு வகை அபின், அபாயகர ஔடதங்கள் கட்டளைச்சட்டத்தின், திருத்தப்பட்ட வடிவமான 1984ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க நச்சு வகை அபின், அபாயகர ஔடதங்கள் சட்டத்தின் கீழ், கஞ்சா தொடர்பான குற்றங்கள் தண்டிக்கப்படுகின்றன.



கஞ்சாவின் இலை, பூ, சமூலம் (அடி வேருடன் கூடிய முழுத் தாவரம்), நார், விதை என அனைத்தும் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுவதாகக் கூறுகின்றார் அரச சித்த வைத்தியர் எஸ். போல்டன் ரஜீவ்.

கஞ்சாவிலுள்ள டெட்ரா ஹைட்ரோ கனபினோல் (THC) எனும் ரசாயனம், மனிதனின் மூளைக் கலங்களைக் கொல்லக் கூடிய நஞ்சுப் பொருள் என்கிறார் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம். றஸாட்.

கஞ்சாவை ஆயுர்வேதத்தில் மருந்துப் பொருளாகப் பயன்படுத்தும் போது, அதிலுள்ள நஞ்சை முறிப்பதற்கான வழிமுறைகள் கூறப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

கஞ்சாவை புகைப்பதன் மூலமாகவோ, அல்லது நஞ்சை முறிக்காமல் வேறு வகையில் பயன்படுத்துவதன் மூலமாகவோ அது மருந்தாக அமையாது என்று கூறும் அவர், ‘டெட்ரா ஹைட்ரோ கனபினோல் இருக்கத்தக்க நிலையில் கஞ்சாவை பயன்படுத்தினால், அது கஞ்சாவுக்கு அடிமையாகும் (Addiction) நிலையை ஏற்படுத்தி விடும்” என்கிறார்.

‘நோயைக் குணப்படுத்த, தடுக்க, கண்டுபிடிப்பதற்காகவே மருந்து பயன்படுத்தப்படுகிறது. இந்த மூன்று நோக்கங்களைத் தவிர, வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் எதுவும் மருந்தாக அமையாது” என அவர் விவரிக்கின்றார்.

மருந்துகள் வைத்தியர்களினால் கட்டாயமாகப் பரிந்துரைக்கப்பட வேண்டும் எனக்கூறும் அவர், மருந்தைப் பயன்படுத்தும் அளவு, வேளைகள் மற்றும் பயன் படுத்தும் அதிகூடிய காலம் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார்.

இவை பின்பற்றப்படாமல் மருந்து பயன்படுத்தப்பட்டால், அது மருந்தாக அமையாது என்றும், மருந்தை துஷ்பிர யோகம் செய்ததாகப் போய்விடும் எனவும் விளக்கினார்.

### துஷ்பிரயோகம் நடக்காது என்பதற்கு உத்தரவாதம் என்ன?

இலங்கையில் கஞ்சா தடைசெய்யப்பட்டுள்ள போதும், மருந்து உற்பத்திக்காக கஞ்சாவை பயன்படுத்துவது சட்ட ரீதியாக அனுமதிக்கப் படுகிறது. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தரவுகளின்படி, 2021 ஆம் ஆண்டில் ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிப்பதற்காக இலங்கையில் 810 கிலோகிராம் கஞ்சா பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றில் மதன மோதகம், காமேஷ் வரி மோதகம் ஆகியவற்றைப் தயாரிப்ப தற்காக அதிகளவு கஞ்சா பயன்படுத்தப் பட்டுள்ளது. இவை - பாலியல் எழுச்சியை ஏற்படுத்துவதற்கான மருந்துகளாகும்.

வரவு - செலவுத் திட்டத்தில் கஞ்சாவை ஏற்றுமதிக்காக பயிரிடும் திட்டம் முன் வைக்கப்பட்டுள்ள போதிலும், உலகள வில் கஞ்சாவை இறக்குமதி செய்யும் நிலை குறைந்து கொண்டு செல்வதாகவும், கஞ்சா சட்டரீதியாக்கப்பட்டுள்ள நாடுகளில் - உளப்பிளவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் றஸாட் கூறுகின்றார்.

‘வெளிநாட்டு ஏற்றுமதிக்காக கஞ்சா பயிரிடப்படும் போது, அது உள்நாட்டில் துஷ்பிரயோகம் செய்யப்படாது என்பதற்கு அரசாங்கம் வழங்கும் உத்தரவாதம் என்ன என்பது பற்றியும் பேசப்பட வேண்டும்” என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

‘உலகளவில் இலங்கைத் தேயிலையின் தரம் உயர்வானது. அதேபோன்று இலங்கை ரப்பரும் உலகளவில் தரமானது. ஆனால் உலக சந்தையில் இவற்றுக்கான இடங்களை நம்மால் தக்க வைக்க முடியவில்லை. நம்மைச் சுற்றிக் கடலினை வைத்துக் கொண்டு - டின் மீன்களை இறக்குமதி செய்யும் நிலையில் நாம் இருக்கின்றோம்.

இதற்குள் கஞ்சாவை ஏற்றுமதி செய்து டாலர்களை சம்பாதிக்க முடியுமா என்கிற கேள்வி பொதுவெளியில் உள்ளது” எனவும் றஸாட் கூறுகின்றார்.

‘ஆடை உற்பத்தியில் இலக்கைக்கு இருந்த இடம், தற்போது வங்கதேசத்துக்கு சென்றுள்ளது. ஆடை உற்பத்தித் துறையில் திறனுள்ள பல இலங்கைத் தொழிலாளிகள் வங்கதேசத்துக்கு சென்று விட்டனர். இந்த நிலையில் வங்கதேசத்திடம் நாம் கடன் வாக்கிக் கொண்டிருக்கின்றோம். இதுதான் நாட்டின் நிலைமை”.

கஞ்சா உற்பத்தி தொடர்பில் பேசும் அரசியல்வாதிகளுக்கு, அது குறித்து இருக்கும் அறிவு என்ன என்கிற கேள்வி பரவலாக உள்ளது எனக் கூறும் றஸாட், 1950ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு சிகரட் வகைகளைக் கொண்டு வருவதற்காகப் பயன்படுத்தப்பட்ட அத்தனை விளம்பர உத்திகளும், தற்போது கஞ்சா விடயத்திலும் பயன்படுத்தப்படுகிறது என்கிறார்.

இலங்கையில் சிகரட் சட்டரீதியாக்கப்பட்டமையினால் நாடு பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்கின்றமையினையும், புதைத்தலால் நோயுற்றவர்களுக்கு மக்களின் வரிப்பணத்தில் இலவச மருத்துவம் வழங்கப்படுகின்றமையினையும் சுட்டிக்காட்டிப் பேசிய றஸாட், இதேநிலை கஞ்சா விடயத்திலும் உருவாகி விடுமோ என்கிற அச்சம் தனக்கு உள்ளதாகவும் கூறுகின்றார்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தரவுகளின் படி, இலங்கையில் சட்டவிரோத போதைப் பொருள் சார்ந்த தவறுகளுக்காக



உலகளவில் கஞ்சாவை இறக்குமதி செய்யும் நிலை குறைந்து கொண்டு செல்வதாகவும், கஞ்சா சட்டரீதியாக்கப்பட்டுள்ள நாடுகளில் – உளப் பிளவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் றஸாட் கூறுகின்றார்.

2021ஆம் ஆண்டு 1,10,031 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் கஞ்சா தொடர்பான குற்றங்களுடன் தொடர்புடையோரின் எண்ணிக்கை 50, 412 ஆகும். கடந்த வருடம் மட்டும் 15,628 கிலோகிரா முக்கும் அதிகமான கஞ்சா கைப்பற்றப்பட்டது. 2021ஆம் ஆண்டில், நாட்டில் 14 வயதுக்கு மேற்பட்டவர்களில் 3,01,898 பேர் கஞ்சா பயன்படுத்தியுள்ளனர்.

### சித்த மருத்துவத்தில் சிவ மூலிகை

கஞ்சா ஒருபுறமாக தடைசெய்யப்பட்ட போதைப் பொருளாக இருக்கும் நிலையில், மறுபுறமாக ஆயுர்வேத, சித்த மற்றும் பரம்பரை மருத்துவங்களில் மிக முக்கிய மருந்துப்பொருளாகவும் கஞ்சா பயன்படுத்தப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# மூன்று உலகையும் வென்ற...



(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)
கஞ்சாவின் இலை, பூ, சமூலம் (அடிவேருடன் கூடிய முழுத் தாவரம்), நார், விதை என அனைத்தும் சித்த மருத்து வத்தில் பயன்படுத்தப் படுவதாகக் கூறுகின்றார் கைதடியில் அமைந்துள்ள சித்த போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட பதிவாளரும், அரச சித்த வைத்தியருமான எஸ். போல்டன் ரஜீவ்.

'கஞ்சாவுக்கு வெவ்வேறு பெயர்கள் உள்ளன. சித்த மருத்துவத்தில் இதனை 'சிவ மூலிகை' என்பர். சிவனை 'மூன்று உலகையும் வென்றவர்' என்றும் கூறுவ துண்டு. ஆனந்தமூலி, கற்பமூலி என் றும் கஞ்சாவுக்கு பெயர்கள் உள்ளன. கோரக்கர் மூலி எனும் பெயரும் உண்டு. கோரக்கர் என்பவர் 18 சித்தர்களில் ஒருவர். அவர் கஞ்சா உபயோகித்திருக்கிறார். மூதண்டம் எனும் பெயராலும் கஞ்சா அழைக்கப் படுகிறது" என, கஞ்சா குறித்து டாக்டர் போல்டன் ரஜீவ் விளக்கமளித்தார்.

கஞ்சா கைப்பு (கசப்பு) சுவையைக் கொண்டது என்றும், மருத்துவத்தில் இது கார்ப்பு (காரம்) சுவையாக வேலை செய்யும் எனவும் அவர் விவரித்தார்.

### மருத்துவ செயற்பாடுகள்

இதன்போது கஞ்சாவின் மருத்துவ செயற்பாடுகள் தொடர்பிலும் டாக்டர் போல்டன் ரஜீவ் கூறினார். 'கஞ்சா வெப்பமுண்டாக்கி, உறக்கமுண்டாக்கி, வலி தெரியாமல் தூக்கத்தில் வைத்திருக்கும், காமத்தைப் பெருக்கும், நோவு விளங்காமல் வைத்திருக்கும், சிறுநீர் பெருக்கி (அதிக சிறுநீரை உருவாக்கும்), பேறுவலி உண்டாக்கி (குழந்தைப் பேறின் போது வலியை ஏற்படுத்தப் பயன்படுத்தப்படும்) என, பல வேலைகளைச் செய்யும்" என அவர் குறிப்பிடுகின்றார்.

சித்த மருத்துவத்தில் கஞ்சா தொடர்பான சிகிச்சை முறைகள், பாட்டு வடிவில் கூறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 'உதாரணமாக தேரையர் வெண்பா, அகத்தியர் குணவாகடம் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். ஏடுகளில் இருந்த பாடல்கள் தற்போது பொழிப்பாக எழுதப்பட்டுள்ளது. 'குணபாடம் மூலிகைத் தொகுப்பு' என அது புத்தகமாக உள்ளது. ஒவ்வொரு மூலிகையின் குணங்களும் அந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.. சித்த மருத்துவத்தில் இது முக்கியமானதொரு புத்தகம்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

தசைப்பிடிப்பு, நரம்புவலி, பெரும்பாடு (பெண்களுக்கு ஏற்படும் அதிக ரத்தப்போக்கு), கீழ்வாயு, மூட்டு வாதங்கள், இரைப்பு நோய் (ஆஸ்துமா), வயிற்றோட்டம், ஒற்றைத் தலிவலி, வயிற்றுவலி, இருமல் மற்றும் மிகுந்த பசி போன்றவற்றை கஞ்சா மருந்து குணமாக்கும் எனவும் டாக்டர் ரஜீவ் தெரிவித்தார்.

'கஞ்சாவை பயன்படுத்தும் அளவிலேயே அதன் மருத்துவ செயற்பாடுகள் உள்ளன. கஞ்சா இலையின் தூளை 32 கிராம் தொடக்கம் 65 கிராம் வரையில் தான் மருந்ததாக நாங்கள் பயன்படுத்த முடியும். இலையிலிருந்து பிரித்தெடுத்து (உதாரணமாக சாறு வடிவில்) பயன்படுத்தும் போது 16 மில்லிகிராம் தொடக்கம் 48 மில்லிகிராம் வரையில் பயன்படுத்த முடியும்" என்கிறார்.

கஞ்சாவை 'சுத்தி' செய்து அதிலுள்ள நச்சுத்தன்மையை அகற்றாமல் பயன்படுத்தும் போது, நரம்பு மண்டலத்தில் அது பிரச்சினைகளை உண்டாக்கும் எனவும் எச்சரித்தார்.

### மனப் பிரள்வை ஏற்படுத்தும்

'கஞ்சாவை அதிகளவில் ஒருவர் உட்கொண்டால், அதன் நச்சுத்தன்மையின் அறிகுறிகள் உடலில் வெளிப்படும். உதாரணமாக வெறிகொள்ள வைக்கும். அப்போது அந்த நச்சுத்தன்மையை இல்லாமல் செய்வது எப்படி என்பது தொடர்பாகவும் சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது. கஞ்சாவை அளவு கடந்து உள்ளெடுத்தால், வலிப்பு, மயக்கம், நாடியில் தளர்வு, கண்ணீர் பெருகுதல் போன்றவை ஏற்படும்" என, அதன் பாரதூரத் தன்மை குறித்தும் பேசினார்.

'கஞ்சாவை நஞ்சு நீக்காமல் அல்லது கஞ்சா மருந்தை அளவுக்கும் காலத்துக்கும் மீறிப் பாவிக்கும் போது, அது நரம்பு மண்டலத்தைத் தாக்கி அடிமையாதலை (Addiction) ஏற்படுத்தும். அதாவது 'அதுதான் வேண்டும்' எனும் மனநிலை உருவாகும்.

நீண்ட நாட்கள் பாவனையின் போது நரம்பு மண்டலத்திலுள்ள 'செல்'கள் அழிக்கப்படுவதால் உடலில் தளர்வுநிலை, வலிப்பு போன்றவை ஏற்படும். ஆரம்பத்தில் பாலியல் எழுச்சியை கஞ்சா உருவாக்கினாலும் - அதனை அதிகளவிலும் தொடர்ச்சியாகவும் எடுத்துக் கொள்ளும் போது, பாலியல் எழுச்சியை இல்லாமலாக்கி விடும்" என்றும், 'ஒரு கட்டத்தில் மனப் பிரள்வு நிலையை இது ஏற்படுத்தி விடும்" எனவும் டாக்டர் போல்டன் ரஜீவ் எச்சரித்தார்.

எது எவ்வாறாயினும், இலங்கையில் சட்டத்தின் பிரகாரம் அபாயகர ஔடதமாக கஞ்சா உள்ளதால், அதனை தாம் எவருக்கும் சிபாரிசு செய்யவதில்லை எனவும் அவர் கூறினார்.

### யோசனையின் முன்னோடி

கஞ்சாவை இலங்கையில் சட்டபூர்வமாக்க வேண்டுமென்றும், அதனை ஏற்றுமதிக்காகப் பயிரிட வேண்டுமெனவும் அண்மைக் காலமாக உரத்துப் பேசி வருபவர் - சுற்றுலாத்துறை ராஜாங்க அமைச்சர் டயானாக கமகே. இதற்காக இவர் பல்வேறு கண்டனங்களையும் எதிர்கொண்டு வருகிறார்.

கஞ்சா தொடர்பில் 1800களில் இலங்கையில் பிரித்தானியா கொண்டு வந்த கட்டளைச் சட்டத்தை ரத்து செய்து, கஞ்சா பயிர்ச் செய்கையை சட்டபூர்வமாக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ள டயானா கமகே, கஞ்சாவை பயிரிட்டு ஏற்றுமதி செய்து - அண்ணிய செலாவணி பிரச்னைக்கு தீர்வுகாண முடியுமென்றும், அதன்மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் எனவும் நாடாளுமன்றில் பல தடவை கூறியுள்ளார்.

கஞ்சா செடி என்பது இயற்கையாலும் கடவுளாலும் வழங்கப்பட்ட வரம் என்றும், மதம், கலாசாரம் எனும் வரையறைகளுக்குள் இருந்தால் நாட்டை முன்னேற்ற முடியாது எனவும் அவர் நாடாளுமன்றில் குறிப்பிட்டிருந்தார்.

'அரசின் அனுசரணையுடன் வர்த்தக ரீதியாக கஞ்சா பயிரிடப்பட வேண்டும். கஞ்சாவை பயிரிட்டு ஏற்றுமதி செய்தால் இரண்டு, மூன்று வருடங்களில் நாட்டின் கடனை அடைத்து விட முடியும். வெளிநாடுகளிடமோ சர்வதேச நாணய நிதியத்திடமோ நாம் கையேந்தத் தேவையில்லை" எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

கஞ்சாவை ஏற்றுமதிக்காக பயிரிடும் ஜனாதிபதியின் யோசனையை நாடாளுமன்றில் வரவேற்றுப் பேசிய டயானா கமகே, 'இலங்கையில் கஞ்சாவை பயிரிடுவதற்கு ஜனாதிபதி முன்வைத்த யோசனையும், இந்த மருத்துவ மூலிகையின் மகத்துவத்தை ஜனாதிபதி உணர்ந்திருப்பதும் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது" என்றார்.

கஞ்சா செய்கை மூலம் இரண்டு பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான முதலீடுகளை அடுத்த வருடம் நாட்டுக்குக் கொண்டுவர திட்டமிட்டுள்ளதாகவும் அவர் நாடாளுமன்றில் தெரிவித்திருக்கிறார்.

### கஞ்சா - இலங்கையின் கலாசாரம்

இதேவேளை, ஜனாதிபதியின் கஞ்சா தொடர்பான யோசனையை, முன்னாள் சுகாதார அமைச்சரும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ராஜித சேனாரத்னவும் நாடாளுமன்றில் வரவேற்றுப் பேசினார்.

கனடா, அமெரிக்கா நாடுகளில் ட்ரன்கியுலைசர் (Tranquilizer) மருந்துகளிலும் (பதட்டம், பயம் மற்றும் மனக் குழப்பம் போன்ற நிலைகளைக் குறைக்கப் பயன்படுத்தும் மருந்து). மன அழுத்தத்துக்கு எதிரான மருந்துகளிலும் கஞ்சா பயன்படுத்தப்படுவதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

'நான் சுகாதார அமைச்சராக இருந்த போது, ராணுவத்தைக் கொண்டு கஞ்சாவைப் பயிரிட்டு அதனை மருந்துப் பொருளாக ஏற்றுமதி செய்யும் யோசனையொன்றை அமைச்சரவையில் முன்வைத்தேன். அப்போது இது கலாசாரத்துக்கு விரோதமானது என அப்போதைய ஜனாதிபதி கூறினார். நான் அவருடன் அங்கு தர்க்கிக்க

**கஞ்சாவை அதிகளவில் ஒருவர் உட்கொண்டால், அதன் நச்சுத்தன்மையின் அறிகுறிகள் உடலில் வெளிப்படும். உதாரணமாக வெறிகொள்ள வைக்கும். அப்போது அந்த நச்சுத்தன்மையை இல்லாமல் செய்வது எப்படி என்பது தொடர்பாகவும் சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது. கஞ்சாவை அளவு கடந்து உள்ளெடுத்தால், வலிப்பு, மயக்கம், நாடியில் தளர்வு, கண்ணீர் பெருகுதல் போன்றவை ஏற்படும்.**

விரும்பவில்லை. பிறகு அவரிடம் சென்று, எமது நாட்டின் கலாசாரமாக கஞ்சா இருந்தது எனக் கூறினேன்" என டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வெள்ளைக்காரர்கள் இலங்கைக்கு புகையிலையைக் கொண்டுவந்து கஞ்சா கலாசாரத்தை இல்லாமலாக்கினர் என்றும் புகையிலைக்கு கிராக்கி ஏற்படாததால் கஞ்சாவை தடை செய்தனர் என்றும் இதுதான் உண்மையான வரலாறு எனவும் தனது உரையில் அவர் குறிப்பிட்டார்.

'கஞ்சாவை புகைப்பது நுரையீரலுக்கு உகந்ததல்ல. ஆனால், ஆயுர்வேத மருத்துவத்துக்கு அதைப் பயன்படுத்த முடியும். அதேபோன்று அதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் நான்கைந்து பில்லியன் டாலர் வருமானத்தை வருடமொன்றுக்குப் பெற்றுக் கொள்ள முடியும்" எனவும் முன்னாள் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

(பிபிசி)



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


- 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், ............................... போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.


(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை

(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3) 

02. (1) 

03. (3) C, F / B, D / A, E

---

கல்வி tv CHANNEL-1

**26.11.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**26.11.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மட்டு. ஆயித்தியமலையில் காட்டுயானை அட்டகாசம்!



மட்டக்களப்பு, நவ. 26

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஆயித்தியமலை வடக்கு, கற்பானைக்குளம் கிராமத்திற்குள் நேற்று முன் தினம் வியாழக்கிழமை அதிகாலை புகுந்த காட்டுயானை அங்குள்ள கிராமவாசி ஒருவரின் வீட்டை அழித்து துவம்சம் செய்துள்ளது.

குறித்த வீட்டில் இரண்டு பிள்ளைகளும் அவர்களது பாட்டியும், பாட்டனுடனும் வாழ்ந்து வந்த நிலையில் அதிகாலைவேளை வந்த காட்டு யானை இவர்கள் வசித்த வீட்டை உடைத்து முற்றாக அழித்துள்ளது.

இதேவேளை, யானை வருவதை கண்டு வீட்டில் இருந்தோர் அருகாமையில் உள்ள வீட்டுக்கு ஓடிச் சென்று தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

யானை பாதுகாப்பு மின்சார வேலிகள் இருந்தும், அவ் வேலிகளைத் தாண்டி இப்பிரதேசத்திலுள்ள கிராமங்களுக்குள் ஊடுருவி தமது பயிர்களையும் வீடுகளையும் அழித்து வருவதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனைக் கவனத்தில் எடுத்து யானைகளை இங்கிருந்து வெளியேற்றி பெரும் காடுகளுக்குள் துரத்தி, தமக்கு பாதுகாப்பை வழங்குமாறும் இந்த மக்கள் சம்மந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

# மட்டக்களப்பு வாகன விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் பலி!

மட்டக்களப்பு, நவ. 26

வாகன விபத்தில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்துச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு - கொழும்பு வீதி மியாங்குளம் பகுதியில் வைத்து நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கேகாலையிலுள்ள தனது வீட்டிலிருந்து கடமைக்காக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது பஸ் வண்டியுடன் மோதியதிலே பொலிஸ் உத்தியோகத்தர் ஸ்தலத்திலே மரணமடைந்தார்.

இவ்வாறு மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் 33 வயதுடைய அசங்க என்பவர் என அடையாளம் காணப்பட்டார். மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டனர். (அ)

# வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அறிக்கை தமிழில் இல்லை!

## காரைதீவு பிரதேச சபை தவிசாளர் சுட்டிக்காட்டு

அம்பாறை, நவ. 26

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் நாளாந்தம் வெளியிடும் வானிலை அறிக்கை தனியே சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே வெளிவருகின்றது .தமிழில் இவ் அறிக்கை வெளியாவது இல்லை. இது ஏன் என தமிழ் பேசும் மக்கள் பலத்த விசனத்துடன் கேள்வி எழுப்புகின்றனர் என்று காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் விசனம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் இல்லையா? அவர்களுக்கு வளியினால் வரக்கூடிய அனர்த்தங்கள் தாக்க மாட்டாதா ?

அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் இதனைக் கவனத்தில் கொள்வதில்லையா? என்றெல்லாம் அவர்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

மனித உயிர்களை பாதுகாக்கும் அனர்த்த முகாமைத்துவ முன்னாயத்த அறிவிப்பிலும் பாரபட்சம் காட்டப்படுகின்றதா?

அவசியமான அவசர அனர்த்த முகாமைத்துவ முன்னாயத்த அறிவிப்புகள் அவரவர் பாஷையில் வெளியிடப்பட்டாலன்றி அவற்றால் பிரயோசனமில்லை என்று கூறப்படுகிறது.

தமிழ் பேசும் மக்கள் கூடுதலாக உள்ள சில மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ முன்னாயத்த அறிவிப்புகள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இனிமேலாவது வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் தமிழிலும் இந்த அறிக்கைகளை வெளியிட வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்- என்றார். (அ)

# மட்டக்களப்பில் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு கௌரவிப்பு

மட்டக்களப்பு, நவ. 26

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று மட்டக்களப்பு வெல்லாவெளியில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி மட்டு அம்பாறை தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.



ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என். நகுலேஸ் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளர் ப.சாந்தன், காரைதீவுப் பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், வெல்லாவெளி பிரதேச சபை உறுப்பினர் தியாகராஜா, உள்ளிட்ட கட்சியின் பிரதிநிதிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர்களை நினைவு கூரும் முகமாக மாவீரர்களின் பெற்றோர், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்டோரால் ஈகச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுரை, சிறப்புரைகள் இடம்பெற்று பின் மட்டக்களப்பு மாவட்ட மாவீரர்களின் பெற்றொர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களுக்கு உதவிகள் மற்றும் தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

மாவீரர் நினைவு வாரத்தை அனுஷ்டிக்கும் முகமாக வடக்கு கிழக்கு பகுதிகளில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் பல செயற்திட்டங்கள், துயிலுமில்ல துப்பரவுப் பணிகள், மாவீரர் தின நினைவேந்தல் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மாவீரர் குடும்பங்களைக் கௌரவிக்கும் முகமாக மேற்படி நிகழ்வு ஒழுங்கு படுத்தப்பட்டு நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாவீரர்களின் தியாகம் மதிக்கப்படவேண்டுமானால் தமிழ் பிரதிநிதிகள் இணைந்து பயணிக்கவேண்டும்!

## ஜனநாயக போராளிகள் கட்சி வலியுறுத்து

அம்பாறை, நவ. 26

“எமது மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தனது இன்னுயிரை ஈகம் செய்த மாவீரர்களின் தியாகத்தை உண்மையிலே மதிப்பதாக இருந்தால் தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் தமிழ் தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்க வேண்டும்.”

-இவ்வாறு ஜனநாயக போராளிகள் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் சாந்தன் தெரிவித்தார்.

ஜனநாயக போராளிகள் கட்சியினர் போராளிகளின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வை நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெல்லாவெளியில்



நடத்தினர் .

மட்டு.அம்பாறை தலைமையகத்தில் கட்சியின் உப தலைவர் என். நகுலேஷ் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஆரம்பத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றவர்கள் சேர்ந்து கதறியழுத வண்ணம் ஈகைச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தி ஆக வணக்கத்தை மேற்கொண்டார்கள்.

இதில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து சிறப்பித்தார்.

அங்கு சாந்தன் மேலும் உரையாற்றுகையில்.

நாம் எமது மண்ணில் யாருடைய அச்சுறுத்தல் இல்லாமல் சுதந்திரமாக எங்களை நாம் ஆளக்கூடிய ஒரு அதிகாரத்தை கோரி போராட்டத்தை நடத்தி வந்தோம். இந்த மக்கள் விடுதலைக்காக இந்த மண்ணின் விடுதலைக்காக எமது மாவீரர்கள் பல வடிவங்களில் தியாகங்களை செய்தார்கள்.

எனவே அந்த மாவீரர்களின் தியாகங்கள் வெற்றி பெற வேண்டுமாக இருந்தால் சுயாட்சியுடன் கூடிய ஒரு தீர்வை நாங்கள் எட்டவேண்டும்.

தமிழ் தேசிய பரப்பில் இருக்கக் கூடிய தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும். நான் பெரிதா ?நீ பெரிதா ?என்று தூக்கிப் பிடித்துக் கொண்டு அலைய வேண்டாம். நீங்கள் கெட்டிக்காரர்களாக பலவான்களாக இருக்கலாம். ஆனால் எமது நோக்கங்கள் எல்லாம் ஒன்று என்பதை மறந்து விடக்கூடாது . -என்றார். (அ)

# கொரோனாவுக்கு பின் பக்கவாதம் அதிகரிப்பு!

நியூயோர்க், நவ. 26

அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஒரு சிறிய ஆய்வின் படி, கொரோனா தொற்றுக்குப் பிறகு குழந்தைகளுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகமாக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளது.

பீடியாட்ரிக் நியூரொலஜி இதழில் இந்த வாரம் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி கட்டுரையில், மார்ச் 2020 மற்றும் ஜூன் 2021 க்கு இடையில் இஸ்கிமிக் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட 16 நோயாளிகளின் மருத்துவ குறியீடுகளை கொண்டு அவர்களை அடையாளம் கண்டு கொண்டனர்.

ஒட்டுமொத்தமாக, குழந்தைகளுக்கு பக்கவாதம் வந்தால் ஒப்பீட்டளவில் குறைந்த ஆபத்து உள்ளது என்ற நிலையில், கோவிட்-19 பிறகு இந்த பாதிப்பு உண்மையாக மாறியுள்ளது என்று உட்டா ஹெல்த் பல்கலைக்கழகத்தின் குழந்தை நரம்பியல் ஆய்வின் முதன்மை ஆசிரியர் தெரிவித்தார். அதே வேளையில், கடந்த ஐந்து ஆண்டுகளில், பக்கவாதம் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு சராசரியாக 4 ஆக இருந்தது.

2021ஆம் ஆண்டு குழந்தைகள் பற்றிய சர்வதேச ஆய்வு முடிவுகளின் படி தொற்று பாதித்த குழந்தைகளுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகரிக்கவில்லை என்று தெரிவித்துள்ளது. இந்த கூற்று சர்வதேச ஆய்வின் கண்டுபிடிப்புகளுக்கு முரணாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வில் எடுத்துக் கொண்ட 16 குழந்தைகளில், பெரும்பாலான குழந்தைகள் மருத்துவமனையை விட்டு வெளியேறும் போது பக்கவாதத்தால் பாதிப்புக்குள்ளாகினர். இந்நிலையில், பக்கவாதத்தின் அறிகுறிகளை முன் கூட்டியே ஆய்வு செய்யம் அவசியத்தை இந்த புதிய ஆய்வு எடுத்துறைத்துள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# உக்ரைனுக்கு 24 அம்புலன்ஸ்கள் வழங்குகின்றது பிரிட்டன் அரசு!

கீவ், நவ. 26

உக்ரைனுக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் க்ளெவர்லி 24 அம்புலன்ஸ்களை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை தலைநகர் கீவ் சென்று உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கியுடன் பேச்சு நடத்தினார்.

ரிஷி சுனக் தலைநகர் கீவ்வுக்கு விஜயம் செய்த சில நாட்களுக்குப் பிறகு வெளியுறவு செயலாளர் ஜேம்ஸ் க்ளெவர்லியின் இந்த விஜயம் அமைந்துள்ளது.



இதன்போது கருத்து தெரிவித்த வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் க்ளெவர்லி, 'பிரித்தானியா உக்ரைனுடன் தோளோடு தோள் சேர்ந்து நிற்கிறது. ரஷ்யாவின் தாக்குதல் தோல்வி அடையும்' என கூறினார்.

அம்புலன்ஸ்கள், ஆறு கவச வாகனங்கள் உட்பட மேலும் 11 அவசரகால வாகனங்கள் அவசரகாலப் தொகுப்பின் ஒரு பகுதியாக பிரித்தானியா, உக்ரை னுக்கு வழங்கவுள்ளது.

போரின் தொடக்கத்தில் இருந்து அழிக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் தங்குமிடங்கள் போன்ற உள்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப உதவுவதற்காக இது 3 மில்லியன் பவுண்டுகள் நிதியை உள்ளடக்கும். பாலியல் வன்கொடுமைக்கு ஆளானவர்களுக்கு உதவவும் இந்த நிதி பயன்படுத்தப்படும். (அ)

# சீனாவில் உயரும் கொரோனா! புதிதாக 32,943 பேருக்கு தொற்று!!

பீஜிங், நவ. 26

சீனாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 32 ஆயிரத்து 943 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யபட்டுள்ளது.

சீனாவில் அண்மைக் காலமாக கொரோனா பரவல் தீவிரமடைந்து வருகிறது. இதனையடுத்து, அங்கு கொரோனா பரிசோதனை உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் அதிகபட்சமாக நாடு முழுவதும் 31 ஆயிரத்து 444 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டதாக தேசிய சுகாதார ஆணையம் அறிவித்தது.

இந்த நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் பாதிப்பு எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.அதன்படி, புதிதாகி 32 ஆயிரத்து 943 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யபட்டுள்ளது.

இதில் 3 ஆயிரத்து 103 பேருக்கு அறிகுறிகள் காணப்பட்டதாகவும் எனினும் 29 ஆயிரத்து 840 பேருக்கு எந்தவித கொரோனா அறிகுறிகளும் காணப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காற்று மாசினால் ஒரே ஆண்டில் ஐரோப்பாவில் 2 லட்சம் பேர் பலி!

பாரிஸ், நவ. 26

ஐரோப்பிய நாடுகளில் 2020ஆம் ஆண்டில் மட்டும் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் காற்று மாசுபாட்டினால் பலியாகியுள்ளதாக புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

உலகம் முழுவதும் காற்று மாசுபாடு அச்சுறுத்தும் பிரச்னையாக உருவெடுத்து வருகிறது. காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை உலக நாடுகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் ஐரோப்பிய சுற்றுச்சூழல் நிறுவனம் காற்று மாசுபாட்டால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான புள்ளி விவரப்பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் 2020 ஆம் ஆண்டில் மட்டும் ஐரோப்பிய நாடுகளில் 2 லட்சத்து 38 ஆயிரம் பேர் காற்று மாசுபாட்டால் ஏற்படும் நோய்களுக்குள்ளாகி பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பேரிடர் காலத்தில் குறைந்த காற்று மாசுபாட்டை சுட்டிக்காட்டியுள்ள தரவுகள் அதற்கு பின்னான காலத்தில் அதன் அளவு வேகமாக அதிகரித்ததாகத் தெரிவித்துள்ளது.



ஐரோப்பிய நாடுகளின் ஊரகப் பகுதிகளில் உள்ள 96 சதவிகித மக்கள் காற்று மாசுபாடு சிக்கலை எதிர்கொண்டு வருவதாகவும் எனினும் 2005 முதல் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காற்று மாசுபாட்டால் ஏற்படும் இறப்பு 45 சதவிகிதம் குறைந்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளது.

இதேநிலை தொடர்ந்தால் 2030 ஆம் ஆண்டுக்குள் பூஜ்ஜிய காற்று மாசுபாடு நிலையை எட்ட முடியும் என ஐரோப்பிய சுற்றுச்சூழல் நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (அ)

# மலேசியாவின் புதிய பிரதமராக நேற்று பதவியேற்றார் அன்வார்

கோலாலம்பூர், நவ. 26

பல்லின, பல மதங்கள் கொண்ட தென்கிழக்கு ஆசிய நாடான மலேசியாவில், புதிய பிரதமராக அன்வார் இப்ராஹிம் பதவியேற்றுள்ளார்.



அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை வழிநடத்துவதாக உறுதியளித்த அவர், நேற்று வெள்ளிக்கிழமை நாட்டின் நிர்வாக தலைநகரான புத்ராஜெயாவில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் காலை 9 மணிக்கு தனது பணியைத் தொடங்கினார்.

75 வயதான அன்வார் முந்தைய நாள் மன்னர் முன்னிலையில் பதவியேற்ற பிறகு, தனது முதல் ஊடகசந்திப்பில், தான் சம்பளம் வாங்கமாட்டேன் என்றும், தனது அரசாங்கம் அனைத்து மலேசியர்களின், குறிப்பாக ஓரங்கட்டப்பட்ட மற்றும் வறியவர்களுக்கும், இனம் அல்லது மதத்தைப் பொருட்படுத்தாமல் அவர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்து பாதுகாக்கும் என்றும் அவர் கூறினார்.

மேலும், சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார். 'நல்லாட்சி, ஊழலுக்கு எதிரான இயக்கம், நீதித்துறை சுதந்திரம் மற்றும் சாதாரண மலேசியர்களின் நலன் ஆகியவற்றில் நாங்கள் ஒரு போதும் சமரசம் செய்து கொள்ளமாட்டோம்' என்று அவர் கூறினார். அன்வார் கடந்த சனிக் கிழமை ஒரு முடிவற்ற தேர்த லுக்குப் பிறகு மன்னரால் பிரதம ராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

# ஓரினச்சேர்க்கையாளர்கள் மீதான தடையை நிறைவேற்றியது ரஷ்யா!

மொஸ்கோ, நவ. 26

'ஓரினச் சேர்க்கையாளர்களின் பிரசாரம்' எனப்படும் அதன் மீதான தடையை நீடிக்க ரஷ்யாவின் பாராளுமன்றத்தின் கீழ் சபை ஏகமனதாக வாக்களித்துள்ளது.

சட்டத்தின் சமீபத்திய பதிப்பின் கீழ், புத்தகங்கள், திரைப்படங்கள் மற்றும் ஒன்லைனில் உள்ள எந்தவொரு ஓரினச்சேர்க்கையை ஊக்குவிப்பதும் சட்டவிரோதமானது மற்றும் கடுமையான அபராதம் விதிக்கப்படும்.

இது ரஷ்யாவின் எல்.



ஜி.பி.டி சமூகத்தை ஒடுக்கும் மேலும் ஒரு முயற்சி என்று ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

ரஷ்யாவின் கீழ்சபையான டுமாவில் யாருக்கும் எதிராக 397 வாக்குகள் வித்தியாசத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்த சட்டமூலம் இன்னும் மேலவையில் நிறைவேற்றப்பட வேண்டும் மற்றும் ஜனாதிபதி விளாடிமிர் புடின் கையொப்பமிட வேண்டும்.

ஆனால் இது பெரும்பாலும் நிர்வாக நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது.

சர்ச்சைக்குரிய 'ஓரினச் சேர்க்கை பிரசாரம்' சட்டத்தின் அசல் பதிப்பு 2013 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஓரினச்சேர்க்கையாளர்கள் தலைப்புகள் பற்றிய ஒன்லைனில் எந்த விவாதங்களும் தடுக்கப்படலாம் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்கள் சுலோகங்கள் அல்லது சின்னங்கள் கொண்ட பொருட்களை விற்பனை செய்வதும் தடை செய்யப்படும்.

சட்டத்தை மீறும் எவருக்கும் 400,000 ரூபிள் வரை அபராதம் விதிக்கப படும். அதே நேரத்தில் நிறுவனங்கள் 5 மில்லியன் ரூபிள் வரை செலுத்தவேண்டும். (அ)

# கொக்குவிலில் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 26

கொக்குவில்-கேணியடிப் பகுதியில் உள்ள வீடொன்றின் ஜன்னல் வழியாக தொலைபேசி மற்றும் பணம் ஆகியன திருடிச் செல்லப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றது.

குடியிருப்புக்கள் அதிகமான கேணியடிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த திருடன் வீட்டு ஜன்னலை திறந்து உள்ளே இருந்த பெறுமதியான தொலைபேசி மற்றும் ஒரு தொகை பணம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளான்.

சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, கேணியடிப் பகுதியில் தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுவரும் நிலையில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என சுட்டிக்காட்டியுள்ள பாதிக்கப்பட்டவர்கள், கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இவ்வாறான திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக கூறினர். (அ)

# ரயில் பெட்டி தீக்கிரை!



கொழும்பு, நவ. 26

இரத்மலானை ரயில் தொழிற்சாலையில் பழுது பார்க்கப்பட்டுக் கொண்டிருந்த குளிரூட்டப்பட்ட ரயில் பெட்டி நேற்று தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக மேற்படி தொழிற்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெல்டிங் பணியின்போது காற்றினால் தீப்பிடித்ததாகவும், அந்த சிறிய தீயினால் ரயில் பெட்டி முழுவதும் தீப்பிடித்ததாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (அ)

# அன்று கோட்டா ஓடியிருக்காவிட்டால் இன்று உயிரோடு இருந்திருக்கமாட்டார்!

## கூறுகிறார் ரோஹித அபேகுணவர்த்தன

கொழும்பு, நவ. 26

"கோட்டாபய ராஜபக்ஷ அன்று நாட்டை விட்டு போயிருக்காவிட்டால் இன்று உயிருடன் இருந்திருக்கமாட்டார்" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய அன்று நாட்டை விட்டு போயிருக்காவிட்டால் இன்று உயிருடன் இருந்திருக்கமாட்டார். ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்காது வேறு ஒருவர் பதவியேற்றிருந்தால் இந்த நாடு மயான பூமியாகியிருக்கும்.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ச பதவி வகித்த காலத்தில் அவர் போராட்டத்துக்கு முகம்கொடுக்க நேரிட்டார். மீரிஹானவில் உள்ள அவரின் வீட்டைச் சுற்றி வளைத்து ஆரம்பித்த போராட்டம் ஜனாதிபதி செயலகத்தைக் கைப்பற்றும் நிலைமைக்குப் போனது.

கோட்டாபய அப்போது புதிய பிரதமரை நியமிக்க நடவடிக்கை எடுத்த போது பல பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, சரத் பொன்சேகா, அநுரகுமார திஸாநாயக்க, டலஸ் அழகப்பெரும ஆகியோரின் பெயர்கள் அந்தப் பதவிக்கு குறிப்பிடப்பட்டன.

இதன்போது நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இணங்கினோம். அனுபவம் உள்ள, சர்வதேசத்துடன் பேசக்கூடியவருக்கு அந்தப் பதவியை வழங்க இணங்கினோம்.

அத்துடன் கோட்டாபய ஜனாதிபதி பதவியிலிருந்து விலகவும் நேரிட்டது. அன்று அவர் நாட்டை விட்டு போயிருக்காவிட்டால் அவர் இப்போது உயிருடன் இருந்திருக்கமாட்டார். அப்போது ஏற்பட்ட ஜனாதிபதி பதவிக்கு ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்க நாங்கள் இணங்கினோம்.

இதன்படி ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்காது வேறு ஒருவர் பதவியேற்றிருந்தால் இந்த நாடு மயான பூமியாகியிருக்கும் என்பதுடன், அவர் போராட்டக்காரர்களின் பணயக் கைதியாகிருப்பார்.

அத்துடன் போராட்டக்காரர்கள் நாட்டைச் சீரழித்திருப்பார்கள். ஆனால், ரணில் விக்கிரமசிங்க புதிய இராணுவம், பொலிஸார் இன்றி, இருந்த பாதுகாப்புப் பிரிவினரைக் கொண்டே போராட்டத்தை நிறுத்த நடவடிக்கைகளை எடுத்தார்-என்றார். (அ)

# ஓமான் தூதரக அதிகாரியின் இராஜதந்திர கடவுச்சீட்டு ரத்து!

கொழும்பு, நவ. 26

ஓமான் ஆட்கடத்தல் விவகாரத்துடன் தொடர்புடைய தூதரக அதிகாரியின் இராஜதந்திர கடவுச்சீட்டு செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரி சாதாரண கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டு நாட்டுக்கு வருகை தர முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளரும் ஊடகப்பேச்சாளருமான காமினி செனரத் தெரிவித்தார்.

ஓமானில் பெண்களை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் மூன்றாவது செயலாளராக கடமையாற்றிய ஈ. துஷான் எனப்படும் குறித்த நபரின் சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அவர் விரைவில் நாடு திரும்புவதாக ஓமானில் உள்ள தூதரகத்துக்கு அறிவித்துள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# கொரோனா நடைமுறைகளை பின்பற்றுவதே பாதுகாப்பானது

கொழும்பு, நவ. 26

காய்ச்சல் மற்றும் பல வைரஸ் நோய்கள் இந்த நாட்களில் அதிகரித்து வருவதாக சிறுவர் சுவாச நோய் நிபுணர் வைத்தியர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனா காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சுகாதாரப் பழக்கவழக்கங்களை மீண்டும் பின்பற்றினால் இந்த வைரஸ் நிலைகளில் இருந்து தற்காத்துக்கொள்ள முடியும் என அவர் மேலும் கூறினார். (அ)

# குழந்தைகள், பெரியோரின் உடல் பருமன் குறைவடைவு

கொழும்பு, நவ. 26

நாட்டில் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் உடல் பருமன் குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்கு பிரிவு நடத்திய ஆய்வில், துரித உணவு மற்றும் இனிப்பு பானங்களின் பயன்பாடு வெகுவாக குறைந்துள்ளமை மற்றும் மக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளமை இதற்கு காரணமென தெரியவந்துள்ளது.

துரித உணவு சாப்பிடாமல் இருப்பது, இனிப்பு பானங்கள் பயன்படுத்துவதை குறைப்பது, குறுகிய பயணத்திற்கு ஓட்டோக்களை பயன்படுத்தாமல் இருப்பது போன்றவற்றை செலவு அதிகரிப்பால் மக்கள் தவிர்த்தமை மக்களின் ஆரோக்கியத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிள்ளைகளுக்கு துரித உணவுகளை வழங்குவதற்குப் பதிலாக, வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட உணவு மற்றும் கீரைகளை வழங்குவதற்கு பெற்றோர்கள் நடவடிக்கை எடுப்பதும் இதன்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

நாட்டை உள்ளடக்கிய 105 கிராமிய சேவை அலுவலர் பிரிவுகளைப் பயன்படுத்தி இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலைமை தொற்று அல்லாத நோய்களைத் தடுப்பதற்கான முயற்சிகளுக்கு திறம்பட பங்களிக்கும் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்கு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்காலத்தில் குழந்தைகளுக்கு வரும் சர்க்கரை நோய், கல்லீரலில் கொழுப்பு சேருதல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த இந்த நிலை உதவிகரமாக இருக்கும் என அந்தப் பிரிவு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்

துயர் நெற் THUYAR.NET

துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்

ஈழநாடு Eelanadu

ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்

DAN NEWS

டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்

விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# ரஷ்யாவிடமிருந்து இலங்கைக்கு சலுகை விலையில் எரிபொருள்!

## அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார்



கொழும்பு, நவ. 26

**ரஷ்யாவிடம் இருந்து சலுகை விலையில் எரிபொருளை கொள்வனவு செய்வது தொடர்பாக மொஸ்கோவுடன் இலங்கை பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

**இந்தியாவின் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே வெளி விவகார அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.**

ரஷ்யாவுடன் இலங்கை நீண்ட காலமாக நல்ல இராஜதந்திர உறவுகளைப் பேணி வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச நியதிகள் அல்லது சட்டங்களை மீறாமல் இலங்கை ரஷ்யாவுடன் இணைந்து பணியாற்ற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்ய - உக்ரேனிய மோதலால் நாங்கள் அசாதாரணமாக பாதிக்கப்பட்டுள்ளோம் என தெரிவித்த அமைச்சர், பெற்றோல், நிலக்கரி, தானிய விலைகள் மற்றும் உரங்களின் விலை உயர்வு ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

எனவே இராஜதந்திர ரீதியிலும் பேச்சுவார்த்தை மூலமும் இதனை விரைவாக தீர்க்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்வதாக அவர் தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் நிலவும் இராணுவ மோதல்கள் பல தசாப்தங்களில் மிக மோசமான பரிமாற்ற நெருக்கடியை எதிர்நோக்கும் இலங்கைக்கு கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் இங்கு மீண்டும் வலியுறுத்தினார்.

இந்த கலந்துரையாடல்கள் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், “இலங்கையில் சுமார் 33 வீதம் பேர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்கள் அந்தத் தொழிலை மேற்கொள்வதற்கு எரிபொருள் அத்தியாவசியமான காரணியாகும். இது எமது மக்களின் வாழ்வாதாரம் போன்றது.

எமது ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியுடன் எரிபொருளின் விலையும் நான்கைந்து மடங்காக அதிகரித்துள்ளது. பெரும்பாலான இலங்கையர்கள் அந்த விலையை தாங்க வேண்டியுள்ளது. அது கடினம்.

மேலும், ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரண்டும் இலங்கைக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வரும் நாடுகளாகும். உண்மையில், கடந்த காலங்களில், நம் நாட்டிற்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வரும் பத்து நாடுகளில் அவர்கள் முன்னணியில் இருந்தனர்.

இந்த மோதல் சூழ்நிலை காரணமாக அவர்களின் வருகை வெகுவாக குறைந்துள்ளது. இது நமது பொருளாதாரத்தையும் இன்னொரு பக்கம் பாதிக்கிறது.

இந்த அனைத்து உண்மைகளையும் உன்னிப்பாகக் கவனித்த பிறகு, சலுகை விலையில் எரிபொருளைப் பெறுவதற்கான வழிமுறையில் கவனம் செலுத்தினோம். உண்மையில், எதிர்காலத்தில் ரஷ்யாவிடமிருந்து சலுகை விலையில் எரிபொருளைப் பெறுவதற்கான வாய்ப்பு இருந்தால், நாங்கள் நிச்சயமாக அந்த வாய்ப்பைப் பயன்படுத்துவோம்.

ஏனென்றால், இந்த விலைவாசி உயர்வை இந்த நாட்டு மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது. எங்கள் ஜனாதிபதி சொன்னதுபோல், யானைகள் சண்டையிடும் போது புல் பாதிக்கப்படும்”-என்றார். (அ)



# சட்டவிரோத குடியேற்றம் குறித்து இலங்கை - ஆஸி. இடையே பேச்சு

*சிட்டகொங், நவ. 26*

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான சட்டவிரோத குடியேற்றம் குறித்து கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவுஸ்திரேலியாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் கிம் வாட்ஸுடன் கலந்துரையாடியுள்ளார்.

23 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கத்தின் அமைச்சர்கள் குழுவின் 22ஆவது கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக இரு அமைச்சர்களும் பங்களாதேஷுக்கு சென்றுள்ளனர். இதன்போதே இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள், பொருளாதார அபிவிருத்தி, கடல்சார் மற்றும் சுற்றுலா துறைகளின் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் குறித்து இதன்போது கலந்துரையாடியதாக அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான சட்டவிரோத குடியேற்றம் மற்றும் இரு தரப்பு நலன்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக அவுஸ்திரேலிய அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அவர் மேலும் கூறினார். (அ)

# பேராசிரியர் கைலாசபதி நினைவேந்தல் நிகழ்வு

*யாழ்ப்பாணம், நவ.26*

பேராசிரியர் க. கைலாசபதியின் 40ஆவது நினைவேந்தல் நிகழ்வு தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின் 33ஆவது நினைவு தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுழிபுரம் ‘கே.ஏ.எஸ். சத்தியமனை’ நூலக அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் இந்து கலாசாரத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நினைவு பேருரையை கலாநிதி ந. இரவீந்திரன் ‘பாரதியின் மெய்ஞானம்’ என்ற தலைப்பில் ஆற்றுவார். (அ)

# ஆசிரியர்களின் ஆடை குறித்து தீர்மானம் எதுவும் எட்டவில்லை

*கொழும்பு, நவ. 26*

பாடசாலை ஆசிரியர்கள் அணியவேண்டிய ஆடை தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் அது தொடர்பில் முன்வைக்கப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் தீர்மானங்கள் எட்டப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் அனைத்து ஆசிரியர்களும் முன்பு இருந்த நடைமுறைகளின்படி பணிக்கு சமூகமளிக்கவேண்டும் என்று அவர் மேலும் கூறினார். விரும்பும் ஆடையில் பாடசாலைக்கு சமூகமளித்த பல ஆசிரியர்கள் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இலங்கையுடனான வர்த்தக உறவை அதிகரிக்க பங்களாதேஷ் விருப்பம்

*சிட்டகொங், நவ. 26*



பங்களாதேஷுக்கும் தெற்காசிய நாட்டுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கு இலங்கையுடன் நேரடி கப்பல் இணைப்பை ஏற்படுத்தவேண்டியதன் அவசியத்தை பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் ஏ.கே. அப்துல் மொமென் வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடை யிலான முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை முன்கூட்டியே முடிப்பதற்கான பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதையும் அவர் வலியுறுத்தினார்.

இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கத்தின் 22அவது அமைச்சர்கள் கூட்டம் பங்களாதேஷில் இடம்பெறும் நிலையில், அங்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் அலி சப்ரியுடன் பங்களாதேஷின் வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு நடத்தியபோது இந்த முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பின்போது, இரு தரப்பு உறவுகளின் பரந்த அளவைப் பற்றி விவாதித்த இரு தலைவர்களும் இரு நாட்டு மக்களின் மேம்பாட்டுக்காகவும் பிராந்தியத்தின் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்காகவும் நெருக்கமாக இணைந்து பணியாற்ற நம்பிக்கை தெரிவித்தனர்.

இதன்போது, பங்களாதேஷில் இருந்து மலிவு விலையில் விவசாய பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதை அதிகரிக்குமாறு இலங்கையிடம் பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

பங்களாதேஷுடன் நெருங்கிய பங்காளியாக செயற்படுவதற்கு தமது நாடு ஆர்வமாக உள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (அ)

# தாமதமாக பணிக்கு வருவோருக்கு அபராதம் ஏதும் விதிக்கவேண்டாம்

## பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு

*கொழும்பு, நவ. 26*

பொதுப் போக்குவரத்தில் தற்போது நிலவும் பிரச்னைகளை கருத்திற்கொண்டு தாமதமாக பணிக்கு வருபவர்களுக்கு அபராதம் விதிக்கவேண்டாம் என அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மைய வாரங்களில் ரயில் தாமதங்கள் அவதானிக்கப்படுவதாகவும் எனவே இந்தக் காரணியை கவனத்தில் கொள்ளுமாறு நிறுவனங்களின் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய தாமதங்கள் மற்றும் பயணப் பிரச்னைகள் குறித்து ஊழியர்கள் எழுத்து பூர்வ அறிவிப்பை வழங்க வேண்டும் என்றும் நிறுவனங்களின் தலைவர்கள் தலையிட்டு இதற்கான தீர்வுகளை வழங்கவேண்டும் என்றும் அந்த அமைச்சு வலியுறுத்தியுள்ளது. (அ)

## மாவீரரை...

தடை ஒன்றை பெற்ற நிலையில் மன்னார் நீதிவான் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு வழங்கியது.

இந்த நிலையிலேயே நேற்றைய தினம் வெள்ளிக் கிழமை குறித்த வழக்கை அடம்பன் பொலிஸார் கை வாங்கியுள்ளதாக சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர் தாயக பகுதிகளில் உள்ள மாவீரர்களுடைய கல்லறைகள் புதுப்பிக்கப்பட்டு அங்கே திருத்த வேலைகள் இடம் பெற்று வந்த நிலையில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி துயிலும் இல்ல திருத்தப்பணிகள் இடம் பெற்று வந்த நிலையில் மாவீரர் தினத்தை எதிர் வரும் தினங்களில் மன்னார் பிரதேச மக்கள் அனுஷ்டிக்க இருப்பதாகவும் இவ்வாறு பிரதேச மக்கள் இந்த மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கும் போது மீண்டும் ஒரு இனக்கலவரம் இனங்களுக்கிடையிலான முரண்பாடு இடம் பெறலாம் என்றும் எனவே அதற்கு தடை உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு நேற்று முன்தினம் அடம்பன் பொலிஸாரால் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை இன் பிரிவு 106 பிரகாரம் குறித்த வழக்கை ஏற்ற மன்னார் நீதிவான் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு 24 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை மன்னார் நகர சபையின் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் உட்பட 6 நபர்களின் பெயரை குறிப்பிட்டு இடைக்கால தடை ஒன்றை வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அடம்பன் பொலிஸ் பொறுப்பதிகாரி இணைந்து நகர்த்தல் பத்திரம் ஊடாக குறித்த வழக்கை மீண்டும் நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்து குறித்த வழக்கை மீளப் பெறுவதாக தெரிவித்த நிலையில் மாவீரர் தினத்தை நினைவு கூருவதற்காக வழங்கப்பட்ட தற்காலிக தடை உத்தரவு தளர்த்தபட்டுள்ளதாக சட்டத்தரணி டினேசன் தெரிவித்துள்ளார். (ஐ)

## மின்சார...

நாட்டின் மின் உற்பத்திக்கான கேள்வி, மின்கட்டணம் தொடர்பில் இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு காலத்தின் தேவைக்கமைய செயல்படவில்லை. இந்த ஆணைக்குழுவை நிறுவாமலே இருந்திருக்கலாம். நடைமுறைக்கு சாத்தியமான வகையில் மின்சார கட்டணம் தற்போது திருத்தம் செய்யப்படவில்லை.

எரிபொருள், மின்சார கட்டணத்தை நடைமுறைக்கு சாத்தியமாகும் வகையில் திருத்தம் செய்யாவிட்டால் இந்த சேவை துறைகளை முன்னெடுத்து செல்ல முடியாது.

மத தலங்களை மாத்திரம் இலக்காக கொண்டு மின்கட்டணம் திருத்தம் செய்யப்படவில்லை. மாற்றுத்திட்டங்களை செயல்படுத்தும் வரை மத தலங்களுக்கான மின்கட்டணம் தொடர்பில் அவதானம் செலுத்த முடியாது.

ஒருமாத மின் உற்பத்திக்கு மாத்திரம் 889 பில்லியன் ரூபாய் செலவாகும் நிலையில் ,மின் கட்டணம் அறவிடல் ஊடாக 400 பில்லியன் ரூபாய் கிடைக்கப்பெறுகிறது. செலவுக்கும் வருமானத்துக்கும் இடையில் பெரும் வேறுபாடு காணப்படுகின்றன.

ஆகவே, மின்கட்டணம் மீண்டும் திருத்தம் செய்யப்பட வேண்டும் என இலங்கை மின்சார சபை அறிவுறுத்தியது. அதற்கமைய மின்கட்டணம் திருத்தம் தொடர்பில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## கூட்டமைப்பு...

எஸ் தேவானந்தா வரவேற்றுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக பேசுகின்ற போது, இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வையே தீர்வாக வலியுறுத்துவது எனவும், பின்னர் பேச்சின் நிலைமைகளுக்கு ஏற்ப விடயங்களை கலந்தாலோசித்து தீர்மானிப்பதற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவு எடுத்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகின.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "யதார்த்தத்தை புரிந்து கொண்டு பேச்சின்போது விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்வதற்கு கூட்டமைப்பினர் தயாராக இருக்கின்றனர் என்ற செய்தியை கூட்டமைப்பினரின் அண்மைய தீர்மானம் வெளிப்படுத்தியுள்ளது.

நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகள் ஊடாகவே தமிழ் மக்களின் அபிலாசைகளை ஈடேற்ற முடியும் என்று கடந்த 35 வருடங்களாக நான் கூறி வருகின்ற யதார்த்தத்தினை கூட்டமைப்பினர் தற்போது புரிந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது" என்று தெரிவித்தார்.

மேலும், இந்த நிலைப்பட்டில் கூட்டமைப்பினர் உறுதியாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும். தமிழ் மக்கள் தற்போது அனுபவித்து வருகின்ற அமைதியான சூழலை மேலும் வலுப்படுத்தும் வகையில் அனைத்து தமிழ் தரப்பினரும் தற்போதைய அரசியல் சூழலை கையாள்வதற்கு முன்வர வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## யானை தாக்கி...

புலேந்திரன் (வயது48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை மண்வெட்டிக்கு பிடி செய்வதற்காக காட்டுப் பகுதிக்கு சென்ற வேளையில் ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் 20 ஆவது கிலோ மீற்றர் வனப்பகுதியில் யானை தாக்கி அவர் உயிரிழந்தார்.

ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தரவை மாவீரர்...

புறம்பானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்ட மேடை சிலரால் உடைக்கப்பட்டமை காலையில் (நேற்று) பார்த்தோம். இதை யார் செய்திருந்தாலும் இது கண்டனத்துக்கு உரியது.

அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் அரசியல்வாதிகளின் தலையீடு இல்லாமல் இறந்தவர்களுக்கான நினைவேந்தலை செய்யலாம் என்று அறிவித்துள்ள காலத்தில் விஷமிகள் இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ச்சியாக செய்து வருகின்றனர். இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 6.05மணிக்கு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும். அந்த நினைவேந்தலில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்,உறவுகள் அனைவரையும் அழைத்து நிற்கின்றோம் - என்றார்.

# சீனாவின் டீசல் கப்பல் இன்று கொழும்பு வரும்

கொழும்பு, நவ. 26

சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட டீசல் சரக்குகளை ஏற்றிய 'சூப்பர் ஈஸ்டன்' என்ற கப்பல் சிங்கப் பூரில் இருந்து நாட்டுக்கு வரவுள்ளதாக சீன தூதரகம் அறிவித்துள்ளது.

அந்த கப்பலில் இருந்து 10.6 மில்லியன் லீற்றர் (9,000 மெற்றிக் தொன்) டீசல் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதாக சீனத் தூதரகம் தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

இந்த கப்பல் இன்று கொழும்பை வந்தடைய வுள்ளதாகவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்காக சீனாவினால் இந்த டீசல் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

# 200 விசேட மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்

## ராஜித சேனாரட்ன

கொழும்பு, நவ. 26

மருத்துவ சேவையில் மருத்துவர்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டால் வைத்தியசாலைக்குள் போராட்டம் தோற்றம் பெறும். பொருளாதார நெருக்கடியினால் 200 விசேட மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

ஆகவே, மிகுதியாக இருக்கும் மருத்துவர்களையாவது தக்க வைத்துக் கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்என முன்னாள்சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக் கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, பொருளாதார பாதிப்பு மருத்துவ சேவைத்துறையில் தாக்கம் செலுத்தியுள்ளது. மருத்துவர்கள் சேவையில் இருந்து ஒய்வுப் பெறும் வயதெல்லையை மறுபரிசீலனை செய்யுமாறு சுகாதாரத்துறை செயற்குழு கூட்டத்தின் போது பலமுறை வலியுறுத்தியுள்ளேன்.

குருநாகல் வைத்தியசாலையில் மகப்பேற்று பிரிவின் விசேட வைத்தியர்களில் இருவரும், களுத்துறை பொது வைத்தியசாலையில் இரண்டு மகப்பேற்று பிரிவு விசேட வைத்தியர்களும் சேவையில் இருந்து ஒய்வு பெற்றுள்ளார்கள்.

நாட்டில் மருந்து தட்டுப்பாடு காணப்படும் பின்னணியில் மருத்துவர்களுக்கான பற்றாக்குறை தோற்றம் பெற்றால் வைத்தியசாலைக்குள் போராட்டம் தோற்றம் பெறும், அது பாரதூரமான எதிர் விளைவுகளை தோற்றுவிக்கும் என்பதை அழுத்தமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டில் இருந்து சுமார் 200 விசேட மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். பெரும்பாலானோர் நாட்டை விட்டு வெளியேறும் நிலையில் உள்ளார்கள். ஆகவே மிகுதியாக இருப்பவர்களை பாதுகாத்துக் கொள்வதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டும்.

விசேட மருத்துவர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெறும் வயதெல்லை மறுபரிசீலனை செய்வது அவசியமாகும். பொருளாதார பாதிப்பு மருத்துவ துறையில் தீவிரமடைந்தால் முழு நாடும் மிக மோசமாக பாதிக்கப்படும் - என்றார்.

## ரணில்...

மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன், ஈ. பி. ஆர். எல். எவ் வின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான த. சித்தார்த்தன், மாவை சோ. சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கூடினர். இவர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், கோவிந்தன் கருணாகரம், வினோநோகராதலிங்கம், சி. சிறீதரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

நேற்று மாலை 5. 30 மணிக்கு ஆரம்பமான இந்தக் கூட்டம் சுமார் இரு மணி நேரம் நடைபெற்றிருந்தது.

இதில், நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு அபகரிக்கப்பட்ட நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும், அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அரசமைப்பு மற்றும் சட்டங்களை அமுல்படுத்தி மாகாண சபைகளுக்கான தேர்தல் உடனடியாக நடத்தப்பட்ட வேண்டும், உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த வட, கிழக்கு பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான புது அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் - அதிகாரப் பகிர்வு நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதை வரவேற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாடு திரும்பிய...

பஸில் ராஜபக்ஷவை வரவேற்க "தங்கப் பாதை" முனையத்துக்கு வருகை தந்த பொதுஜன பெரமுன கட்சியின் நூற்றுக்கும் அதிகமான உறுப்பினர்கள் சென்றிருந்தனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட சிற்றுண்டி வகைகளுக்கே இந்த பணம் செலுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறுவர்...

இடம்பெறும் இடங்கள் மற்றும் அது குறித்து பெற்றுக்கொள்ளக்கூடிய சேவை தொடர்பிலான தரவுகள் முறையாக இருக்க வேண்டும் என்று யுனிசெவ் தெரிவித்துள்ளது.

இந்த பொறிமுறை சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகளை நிவர்த்திப்பதற்கான திட்டமிடலையும் விரிவாக்கங்களையும் மேம்படுத்துவதற்கு உதவியாக அமையும். புதிய சட்டத்தில் சிறுவர்களுக்கான பாதுகாப்பும் வலுபடுத்தப்பட வேண்டும். அத்துடன், குடும்பங்களை வலுவூட்டுவது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனூடாக குழந்தைகளை தடுத்து வைத்தல், வேலைக்கமர்த்தலை முற்றாக நிறுத்த முடியும். உறுதியான சமூக சேவை, நீதிக்கான சமூகப் பணி ஆகியவை சிறுவர்களை இலங்கையில் பாதுகாப்பதற்கான சிறந்த பொறிமுறை. சிறுவர் அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சமூக சேவை, நீதிக்கான பணியாளர்களின் அபிவிருத்தி, திட்டமிடலுக்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டும்.

அமைச்சுகள், திணைக்களங்கள், பொலிஸ், நீதித்துறை ஆகியன பெண்கள் - சிறுவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கான பொறிமுறையை ஸ்தாபிப்பதும் அவசியம் - என்றும் யுனிசெவ் வலியுறுத்தியுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நெதர்லாந்து - ஈக்குவடோர் மோதல் சமநிலையில் முடிவு

டோஹா, நவ. 26

நெதர்லாந்து, ஈக்குவடோர் அணிகளுக்கு இடையி லான போட்டி 1:1 கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

உலகக் கிண்ணத் தொடர் கட்டாரில் நடக்கிறது. இதில், குழு ஏ அணிகளுக்கு இடையில் நேற்று நடந்த டோஹாவில் நடந்த போட்டியில், 6 ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் கொடி கெப்கோ கோல் அடித்தார்.

இந்த ஆண்டுக்கான உலகக் கிண்ணத் தொடரில் இதுவரை ஆட்டமொன்று ஆரம்பிக்கப்பட்ட மிக சொற்ப வேளையில் வேகமாக அடிக்கப்பட்ட கோல் இதுவாகும்.

எனினும், பின்னர் ஈக்குவடோர் அணி நெதர்லாந் துக்கு கடும் சவாலை ஏற்படுத்தியது. அதன் பின் கூடுதலான நேரம் ஈக்குவடோர் அணியை பந்தை தம்வசம் வைத்திருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமான சிறிது நேரத்தில், 49 ஆவது நிமிடத்தில் ஈக்குவடோர் வீரர் என்னேர் வலன்சியா கோல் புகுத்தினார்.




இறுதியில் இப்போட்டி 1 - 1 கோல் என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. (ஐ)




## வென்றது பிரேஸில்!

டோஹா, நவ. 26

உலகக் கிண்ணத் தொடரில் நேற்று நடந்த போட்டியில் சேர்பியாவை வீழ்த்தியது பிரேஸில் அணி.

பிபா உலகக் கிண்ணத் தொடர் கட்டாரில் நடக்கிறது. குழு ஜி அணிகளுக்கு இடையே நேற்று நடந்த போட்டியில் சேர்பியா பிரேஸில் அணிகள் மோதின.

கோல் எதுவும் அடிக்கப்படாத நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவடைந்தது.

62, 73ஆவது நிமிடங்களில் பிரேஸிலின் ரிச்சலிசன் கோல்களை அடித்தார். சேர்பியாவால் பதில் கோல் அடிக்க முடியவில்லை.

இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் பிரேஸில் அணி வெற்றி பெற்றது. (ஐ)

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் கட்டாரை தோற்கடித்தது செனகல்!

டோஹா, நவ. 26

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று நடந்த போட்டிகளில் ஒன்றில் 3 - 1 என்ற கணக்கில் செனகல் கட்டாரை வெற்றி கொண்டது.

டோஹாவில், குழு ஏ அணிகளுக்கு இடையிலான இப்போட்டியின் 41 ஆவது நிமிடத்தில் செனகல் அணியின் முதல் கோலை பவ்லாயே டியா அடித்தார்.



இடைவேளையின் போது செனகல் அணி 1:0 விகிதத்தில் முன்னிலையில் இருந்தது.

48 ஆவது நிமிடத்தில் செனகலின் இரண்டாவது கோலை பமாரா டியெட்ஹியோ புகுத்தினார்.

78ஆவது நிமிடத்தில் கட்டார் வீரர் முஹமத் முன்தாரி கோல் அடித்தார். இது உலகக் கிண்ண வரலாற்றில் கட்டார் அணிக்காக அடிக்கப்பட்ட முதல் கோலாக அமைந்தது.

இதன்பின் 84ஆவது நிமிடத்தில் செனகல் அணியின் 3 ஆவது கோலை செய்க் டியெங் புகுத்தினார். இறுதியில் 3 - 1 என்ற கோல் கணக்கில் செனகல் அணி வெற்றி பெற்றது.

போட்டியை நடத்தும் நாடான கட்டார் அடைந்த இரண்டாவது தோல்வி இதுவாகும். இந்தத் தோல்வியால் அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை கட்டார் முற்றாக இழந்தது. (ஐ)

## புதிய விடியல் உதைபந்தாட்டம் அன்ரனிஸ், நவஜீவன் வெற்றி!

யாழ்ப்பாணம், நவ. 26

புதிய விடியல் உதைபந்தாட்ட போட்டியில் சென். அன்ரனிஸ், உடுப்பிட்டி நவஜீவன் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

டான் தொலைக்காட்சி குழுமம் யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்குடன் இணைந்து புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரை நடத்துகிறது.

இதில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இரு போட்டிகள் நடைபெற்றன.

முதல் போட்டியில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து சென். தோமஸ் அணி மோதியது. இந்தப் போட்டியில் சென். அன்ரனிஸ் அணி இலகுவாக 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றைய போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதியது. இதில் உடுப்பிட்ட நவஜீவன்ஸ் அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இன்றைய போட்டிகள்

இன்று சனிக்கிழமை நடக்கும் போட்டிகளில் பிற்பகல் 3.30 மணிக்கு சென். லூட்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து யாழ். ஐக்கியம் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4.45 மணிக்கு நடக்கும் போட்டியில் பாசையூர் பாடும்மீன் அணியும் சென். சேவியர் அணியும் மோதுகின்றன. (ஐ)

## வேல்ஸ் அணியை வீழ்த்தியது ஈரான்

அல் ரையான், நவ. 26

உலகக் கிண்ண உதைபந்தாட்ட டிதாடரில் நேற்று நடந்த போட்டியில் வேல்ஸ் அணியை 2:0 கோல் களால் ஈரான் அணி வென்றது.

கட்டாரின் அல் ரையானில் குழு பி இலுள்ள அணிகளுக்கு இடையிலான போட்டியாக இது அமைந்தது. இடைவேளை வரை எந்த அணியும் கோல் அடிக்க வில்லை.

இப்போட்டியின் 86 ஆவது நிமிடத்தில் வேல்ஸ் வெய்ன் ஹென்னஸி சிவப்பு அட்டை காண்பிக்கப் பட்டு வெளியேற்றப்பட்டார். இம்முறை தொடரில் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற றப்பட்ட முதல் வீரர் இவராவார்.

வெய்ன் ஹென்னஸி வெளியேறியதால் 10 பேருடன் விளையாடும் நிலைக்கு வேல்ஸ் அணி தள்ளப் பட்டது. டெனி வர்ரட் அந்த அணியின் புதிய கோல் காப்பாளராக பணியாற்றினர்.

மேலதிக நேரத்தின் 8ஆவது நிமிடத்தில் ஈரானின் ரூபே செஸ்மி முதலாவது கோலைப் அடித்தார். மேலும், 3 நிமிடங்கள் கடந்த நிலையில், ஈரானின் ரமின் ரெஸாயன் 2 ஆவது கோலை புகுத்தினார்.

இறுதியில் 2 - 0 என்ற கோல் கணக்கில் ஈரான் வெற்றி பெற்றது. (ஐ)




தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பகுதியில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை.
(பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :
077 311 9298, 075 313 2805

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.